விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 24 வெள்ளிக்கிழமை (07.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 50

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகளில் இருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

கடந்த காலத்தை குற்றம் சாட்டாமல்

# நாட்டை கட்டியெழுப்ப

# அனைவரும் ஒத்துழையுங்கள்



## ஜனாதிபதி கோட்டா அழைப்பு

(கொழும்பு)

கடந்த காலம் மற்றும் பிரச்சினைகளை நோக்கி விரல் நீட்டிக்கொண்டிருப்பதைவிடுத்து வீழ்ச்சியுற்றிருக்கும் நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி கோட்டா அழைப்பு விடுத்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

சாரதி அனுமதிக்கான

## வைத்திய சான்றிதழ் அரச வைத்தியசாலையில் பெற நடவடிக்கை

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான அனைத்து வைத்திய சான்றிதழ்களையும் அரச வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்வதற்கான புதிய கட்டமைப்பை உருவாக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம)

## திருகோணமலை அரச அதிபராக

முன்னாள் இராணுவ அதிகாரி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட அரச அதிபராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்கவை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திருமலை அரச அதிபராக கடமைபுரிந்த புஷ்பகுமார 23

## கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துக

முஸ்லிம்களின் எதிர்ப்பை நிராகரித்து அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்புரை

(கொழும்பு)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு முஸ்லிம் பிரதிநிதிகளின் கடும் எதிர்ப்பை நிராகரித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அதன் முதல் பணியாக எல்லை நிர்ணயக் குழுவை நியமித்து விரைவாக அறிக்கை தருமாறு பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 23

## மாங்குளத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் சுட்டுப் படுகொலை

காணிப் பிரச்சினை என ஆரம்ப விசாரணையில் பொலிஸார் சந்தேகம்

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் பாலைப்பாணி பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். காணிப் பிரச்சினை காரணமாக அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 23

பிரதமர் மகிந்த

## இந்தியாவுக்கு இன்று விஜயம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். 23

விக்னேஸ்வரன் தலைமையில்

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி உருவாகிறது

9ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சி.வி.விக்னேஸ்வரன் தலைமை 23

## தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்

அடித்துப் படுகொலை

வவுணதீவில் சம்பவம் 08



கோப்பாய் தெற்கில்

## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதில் அதே பகுதியைச் சேர்ந்த ஞான 23

## வடக்கில் சோதனைச் சாவடிகளை அமைத்து தமிழ் மக்களை சிரமத்துக்கு உள்ளாக்காதீர்கள்

தமிழர்கள் தனிமைப்படும் அரசியல் வேண்டாம் – சபையில் ஜே.வி.பி

(கொழும்பு)

வடக்கில் சோதனைச் சாவடிகளை அமைத்து தமிழ் மக்களை சிரமத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், சுதந்திரதின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படாது தமிழர்களை தனிமைப்படுத்தும் அரசியல் இடம்பெறுவதாகவும் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். 23

## யாழ்.பல்கலைக்கழகத்தில் அளவுக்கதிகமான பகிடிவதை

முறைப்பாடுகளையடுத்து இன்று அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அளவுக்கதிகமாக பகடிவதை இடம்பெறுகின்றமை மற்றும் தொலைபேசி மூலமான பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், உயர் கல்வி அமைச்சுக்கும் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து, பகிடிவதைக்கெதிராக கடும் நடவடிக்கைகளை 23

திருக்கேதீஸ்வர அலங்காரவளைவை

## தற்காலிகமாக அமைக்க மன்னார் நீதிமன்றம் அனுமதி

(மன்னார்)

திருக்கேதீஸ்வர அலங்கார வளைவை தற்காலிகமாக அமைக்க மன்னார் மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வர அலங்கார வளைவு தொடர்பான வழக்கானது நேற் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# டக்ளஸ் இந்தியா பயணம்

மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று இந்தியா பயணமாகவுள்ளார். இந்தயா செல்லும் அமைச்சர் டில்லியில் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரை சந்தித்து தமிழ் மக்களின் 13ஆவது திருத்தம் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. (ம-10)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## ஆளுமைத்திறனுக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- எளியமுறைத் தியானங்கள்

கற்றுத்தரப்படவிருக்கின்றன

பயிற்சிகளை வழங்குவதற்கு **தமிழ்நாட்டின் தலைசிறந்த பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியை அருள்நிதி லில்லிபாய் அவர்கள்** வரவழைக்கப்படுகிறார்கள். எனவே இவ் அரிய சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்தி பயன்பெறுமாறு அன்புடன் அறியத் தருகின்றோம்.

காலம் : 08.02.2020 சனிக்கிழமை தொடக்கம்
14.02.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் : மனவளக்கலை பேராசிரியை அருள்நிதி லில்லிபாய்
துணைப் பேராசிரியர் த.நந்தகுமரன்

(C-9169)

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 0212222772



மணிவிழா நாயகியை
பாராட்டி
வாழ்த்துகின்றோம்



திருமதி
## விமலாதேவி சர்வானந்தசிவம் ஆசிரியர்
(SLTS - 1)

சேவை விபரம்

| | |
|---|---|
| 01.09.1992 - 12.03.2009 வரை | யா/சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை |
| 13.03.2009 - 31.06.2010 வரை | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி |
| 01.07.2010 - 31.12.2013 வரை | யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை |
| 01.01.2014 - 05.02.2020 வரை | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை |

அகவை அறுபதினை எமது பாடசாலையான யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் நிறைவு செய்வதையிட்டு மிக மிக அக மகிழ்வு எய்துவதுடன் தாங்கள் செய்த சேவைக்கு நாம் என்றும் நன்றியை நவில்கின்றோம். ஓய்வுகாலத்தில் நோய் நொடி இன்றி வளமுடனும் வாஞ்சையுடனும் குதூகலமாய் என்றென்றும் திகழ்ந்திட உளமார உவகையுடன் பாராட்டி மனதார மகிழ்வடைகின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்.

(C-9167)



20 ஆண்டு
## பிறந்தநாள் நினைவலைகள்

### தெய்வ மணம்கமழ் தெய்வத்திரு. சந்துதன்

(திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் அருந்தவப் புதல்வன்
அதிபர் - உயர்கலைக் கல்லூரி ஆரியகுளம், யாழ்ப்பாணம்.)



இதயம் நிறைந்த இனியவனே சந்துதனே
இன்று இருபதாண்டுகள் தித்திக்கின்ற நினைவுகள்
வார்த்தைகள் இன்றி கனத்த நினைவலைகள்
கண்கள் சீராட்டு நினைக்கிலை பேராட்டி
உன் பெயர்த்தாகி நடந்ததே
சத்தின் அருள்தரிற் சத்தி அருளுண்டாம்
சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாம்
சத்தி சிவமாம் இரண்டும் தன் உள்வைக்கச்
சத்தியம் எண் சித்தித் தன்மையுமாமே (திருமந்திரம்)

*சந்துதன் நிதம் சந்துதம் நினை*
*நினைந்து வாழ்த்தும்*

அன்பு மாமா **சோமையா**
**சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள் புவனேஸ்வரி குடும்பம்**
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தனஞ்செயன் குருக்கள் குடும்பம்**
**சிவஸ்ரீ சுந்தரலிங்கம் குருக்கள் பிரபாலினி குடும்பம்**
(நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆதீன கர்த்தாக்கள்)
**சிவஸ்ரீ திருஞானசம்பந்த குருக்கள் ஜீவிதா குடும்பம்**
(முல்லை குமுழமுனை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்)
**சிவஸ்ரீ பிரசன்னன் குருக்கள் சங்கீர்த்தனி குடும்பம்**
(திருக்கோணேஸ்வரம் சிவன் தேவஸ்தானம், திருக்கோணமலை)

(C-9171)

## கடத்தல் நடவடிக்கை முறியடிப்பு

# தொண்டைமானாறு கடற்கரைப் பகுதியில் 100 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றல்

## மதுவரித்திணைக்களத்தினர் அதிரடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கடற்கரைப் பகுதியிலிருந்து (சிறுவர் பூங்கா அருகில்) 100 கிலோ கிராம் கேரள கஞ்சாவை கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி சங்கானை மதுவரித்திணைக்களத்தினரின் அதிரடி நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டதுடன் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டார். குறித்த கடத்தல் முறியடிப்புச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

சங்கானை மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சங்கானை மதுவரித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பிரபாத் விக்கிரமசூரிய தலைமையில் மதுவரி அத்தியட்சகர் மதன் மோகன், மதுவரி நிலைய அத்தியட்சகர் சஞ்சு ஸ்ரீமன்ன ஆகியோர் குறித்த பகுதிக்குச் சென்று 100 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் சந்தேக நபரொருவரையும் கைது செய்தனர்.

பலாலியைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். சந்தேகநபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-18-60-114)



## சீனா முகங்கொடுத்திருக்கும் சவாலைச் சமாளிப்பதற்கு நாடாளுமன்றம் உறுதுணை

### சீனத் தூதுவரிடம் சபாநாயகர் உறுதி



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரியவை இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சுயூவான் சந்தித்துக் கலந்துரையாடினார். சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இச் சந்திப்பு இடம்பெற்றது.

சீனாவில்ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ்தொற்றுத்தொடர்பான நிலைமைகள் மற்றும் அதனைக்கட்டுப்படுத்துவதற்கு சீன அரசாங்கம், அதிகாரிகள் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து சீனத் தூதுவர், சபாநாயகருக்கு விளக்கமளித்தார்.

சீனா முகங்கொடுத்திருக்கும் சவாலைச் சமாளிப்பதற்கு இந் நேரத்தில் நாடாளுமன்றம் சீனாவுடன் உறுதுணையாக நிற்கும் என்ற உறுதிமொழியை சபாநாயகர் சீனத்தூதுவருக்கு வழங்கினார்.

இதேவேளை, உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் பாதிப்பால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 563 ஆக உயர்ந்துள்ளதுடன் உலகளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதுவரை 28 ஆயிரத்து 256 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவக உரிமையாளர்களுக்கு அபராதம்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் மற்றும் யாழ். மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் இணைந்து சாவகச்சேரி நகர்ப் பகுதியிலுள்ள 14 உணவகங்களில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடத்திய திடீர் பரிசோதனைகளின் போது சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத இரண்டு உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த இரண்டு உணவக உரிமையாளர்களுக்கு எதிராகவும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதில் அச்சடிக்கப்பட்ட தாளில் சிற்றுண்டிகளை சுற்றி வழங்கிய உணவக உரிமையாளருக்கு ஆறாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட அதேவேளை, ஏற்கனவே இரண்டு மாத காலத்திற்கு முன்பாக சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யாத உணவகத்தை 14 நாட்களுக்கு மூடி வைக்க உத்தரவிட்டதுடன் 17 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த உணவக சோதனை நடவடிக்கையில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பரிசோதகர் மற்றும் சாவகச்சேரி நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டது.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக துறைமுகத்துக்கு அருகில் சுமார் 50 ஏக்கர் காணியை இலங்கை துறைமுக அதிகார சபையிடம் வழங்கத் திட்டமிடப்பட்டது.

இதற்கமைவாக, துறைமுகத்துக்கு அருகில் 15 ஏக்கர் அரசாங்கத்துக்கு சொந்தமான காணி ஒன்றை 52 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டமைக்கு அமைவாக பொறுப்பேற்பதற்கும் தனியார் உரித்துடைமையின் கீழ் மேலும் 32 ஏக்கர் காணிக்கு இழப்பீட்டை செலுத்தி காணியை பெற்றுக்கொள்ளும் சட்ட விதிகளுக்கு உட்பட்டதாக பொறுப்பேற்பதற்கும், துறைமுகம் மற்றும் கடல் நடவடிக்கைகள் அமைச்சர் முன்வைத்த பரிந்துரைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (ஐ)

## முதல்வரின் வாகனச் சாரதி விவகாரத்தால் சர்ச்சை நடவடிக்கை எடுக்க மாட்டேன் - ஆனல்ட் விடாப்பிடி

### ஆணையாளர் மௌனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முதல்வ்ரின் உத்தியோகபூர்வ வாகனம் வழங்காத நிலையில் தற்காலிக வாகன சாரதியாக இருந்த யாழ். மாநகர சபைச் சாரதி, முதல்வரின் வாகனத்தை மட்டுமே செலுத்துவார் என்ற கருத்தால் சபை அமர்வில் குழப்ப நிலை ஏற்பட்டது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்ற போதே இக் குழப்ப நிலை ஏற்பட்டது.

யாழ்.மாநகர முதல்வருக்கு அரசாங்கத்தால் உத்தியோகபூர்வ வாகனம் இதுவரை வழங்கப்படாத நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு வடமாகாணப் பிரதம செயலாளரால் முன்னாள் முதலமைச்சரின் உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டது.

குறித்த வாகனம் வழங்கப்பட்டு குறுகிய காலத்துக்குள் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவனின் உத்தரவுக்கமைய முதல்வரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட முதலமைச்சரின் வாகனம் திருப்பப் பெறப்பட்டது.

இந்நிலையில் குறித்த வாகனத்தின் சாரதியாகக் கடமையாற்றிய மாநகர சபையின் சாரதி முதல்வருக்கு வாகனம் வழங்கப்படும்வரை வேறு வாகனங்களைச் செலுத்த மாட்டேன் எனச் சம்பளத்துடன் விடுமுறையில் நிற்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் இருவர் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

முதல்வரின் தற்போதைய வாகனத்தைச் செலுத்துபவர் குறித்த வாகனத்தை முன்பு செலுத்திய நபருக்குச் செலுத்த அனுமதிக்காத நிலையில் அவர் வேறு வாகனத்தைச் செலுத்த மாட்டேன் எனக் கூறி பணி செய்யாது எவ்வாறு சம்பளத்தை மட்டும் பெற முடியும் எனக் கேள்வி எழுப்பினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த முதல்வர் ஆனல்ட், ஆணையாளர் பிறிதொரு வாகனத்தைச் செலுத்துமாறு அனுமதி வழங்கியும் அவர் செலுத்தாமல் தனக்கு வழங்கப்படவுள்ள வாகனத்தை மட்டும் செலுத்துவேன் எனக் கூறுகிறார்.

இவ்வாறு முதல்வர் தெரிவிக்கும் போது குறுக்கிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் மாநகர சபையில் தொழிலாளர்கள் சட்டங்களை மீறி தன்னிச்சையாகச் செயற்படும் போது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கேள்வி எழுப்பினர்.

இதன்போது நான் நடவடிக்கை எடுக்க மாட்டேன் என முதல்வர் பதில் வழங்கியதுடன் ஆணையாளர் குறித்த விவகாரம் தொடர்பில் மௌனமாகவே இருந்தார். (இ-10)

# கொரோனா வைரஸ்ஸால் ஒலிம்பிற்கு பாதிப்பு ஏற்படலாம்

## –பிரதான அதிகாரி

கொரோனா வைரஸ் காரணமாக ஒலிம்பிக் போட்டிகளிற்கான ஏற்பாடுகள் பாதிக்கப்படலாம் என டோக்கியோ ஒலிம்பிக் ஏற்பாட்டுக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி டோசிரோ முட்டோ தெரிவித்துள்ளார்.




எனினும் ஒலிம்பிக் போட்டிகளை இரத்துச்செய்யும் நோக்கம் எதுவும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.


கொரோனோ வைரஸ் பரவி வருவதால் இன்னமும் 170 நாட்களில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக்போட்டிகளிற்கான முன்னேற்பாடுகளிற்கு பாதிப்பு ஏற்படலாம் என்பதுகுறித்து கரிசனை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக்போட்டிகளை நோக்கிய உத்வேகத்திற்கு கொரோனோவைரஸ் தாக்கத்தினால் பாதிப்பு ஏற்படலாம் என்பது குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனோ வைரஸ் பாதிப்பிற்கு விரைவில்முடிவு கட்டப்படும் என எதிர்பார்க்கின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே கருத்தினை ஒலிம்பிக் வீரர்கள் தங்கவுள்ள நகரத்தின் மேயரும் வெளியிட்டுள்ளார்.

# ஐ.பி.எல் சுற்றுப்போட்டியிலிருந்து இங்கிலாந்தின் ஆர்ச்சர் விலகல்




இலங்கை மற்றும் இந்திய பிரீமியர் லீக்கிற்கான தொடர்களிலிருந்து இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஜோப்ரா ஆர்ச்சர் நீக்கப்பட்டுள்ளார்.

ஆர்ச்சரின் வலது முழங்கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக, அவரை வைத்தியர்கள் மூன்று மாதம் ஓய்வில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த மாதம் செஞ்சுரியனில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இங்கிலாந்தின் ஆரம்ப டெஸ்ட் போட்டியில் 24 வயதான வேகப் பந்து வீச்சாளர் ஆர்ச்சரின் வலது முழங்கை உபாதைக்குள்ளானது. இதனால் அவர் அந்த தொடரிலிருந்து விலக்கப்பட்டார்.

இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட ஸ்கேன் பரிசோதனையில் அவரின் முழங்கை எலும்பு முறிவு கண்டுபிடிக்கப்படவில்லை. தொடர்ந்து நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஸ்கேன் பரிசோதனை முடிவில் அவரது முழங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனால் வைத்தியர்கள் அவரை மூன்றும் மாதம் ஓய்வில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர். அதன்காரணமாகவே ஆர்ச்சர் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள இலங்கையுடனான டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள்ளதுடன், இந்தியன் பிரீமியர் லீக்கிலும் விளையாட மாட்டார் என இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனினும் ஆர்ச்சர் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இணைத்துக் கொள்ளப்படுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# உலக உடற்கட்டழகர் சம்பியன்ஷிப்பை நடத்தும் வாய்ப்பை இழக்கும் நிலையில் இலங்கை

இலங்கையின் உடற்கட்டழகர் சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள் பதவிகளில் இல்லாததாலும், அதற்கான இடைக்கால நிர்வாக சபை ஒன்று நியமிக்கப்படாததினாலும் அடுத்த ஆண்டு இலங்கையில் நடத்தப்படவிருந்த உலக உடற்கட்டழகர் சம்பியன்ஷிப் போட்டியை நடத்தும் வாய்ப்பை இலங்கை இழக்கும் நிலை ஏற்படும் ஆபத்து இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

72 நாடுகளைச் சேர்ந்த 765 வீரர்கள் வரை போட்டித் தொடரில் பங்கேற்கும் மிகப் பெரிய போட்டியான உலக உடற்கட்டழகர் சம்பியன்ஷிப் தொடரை நடத்தும் வாய்ப்பைப் பெறுவது அவ்வளவு எளிதான விடயமல்ல.

அவ்வாறான அரிதான வாய்ப்பை இலங்கை பெற்றும், சம்மேளனத்தின் நிர்வாகக் குறைபாடுகளால் இலங்கைக்கு இந்த வாய்ப்பு கைநழுவிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

உடற்கட்டழகர் சம்மேளன நிர்வாக சபை கலைக்கப்பட்ட நிலையில் இடைக்கால நிர்வாக சபை நிர்ணயிக்கப்பட்டது. அவர்களும் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்திருந்த நிலையில் தற்போது உடற்கட்டழகர் சம்மேளனத்துக்கென எந்தவொரு நேரடி அதிகாரியும் இல்லை.

கடந்த ஆண்டு ஜனவரியில் அமைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையின் முக்கிய பொறுப்புகளில் ஒன்று, அதன் தேர்தல்களை விரைவாக நடத்த விளையாட்டுத்துறை அமைச்சகததுக்கு பரிந்துரைகளை வழங்குவதாகும். ஆனால் அது நடைபெறவில்லை.

தற்போது முறையான நிர்வாக சபை இலங்கை உடற்கட்டழகர் சம்மேளனத்துக்கு இல்லாததின் காரணமாக இந்த வாய்ப்பு இலங்கையை விட்டு நழுவிச் செல்லக்கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிக்பாஷ் இறுதிக்குள் மெல்பேர்ன்



பிக் பேஷ் ரி-20 தொடரின், செலன்ஞர் போட்டியில் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மெல்பேர்ன் விளையாட்டு மைதானத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியும், சிட்னி தண்டர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 194 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மார்கஸ் ஸ்டொயினிஸ் 83 ஓட்டங்களையும், நிக் லார்கின் ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சிட்னி தண்டர் அணியின் பந்துவீச்சில், கிறிஸ் மோறிஸ் 4 ஓவர்கள் வீசி 30 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து 195 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி தண்டர் அணியால், நிரணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் அடியெடுத்து வைத்துள்ளது.

இதன்போது சிட்னி தண்டர் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அலெக்ஸ் ரோஸ் 58 ஓட்டங்களையும், அர்ஜுன் நாயர் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியின் பந்து வீச்சில், ஹரிஸ் ரவூப் 3 விக்கெட்டுகளையும், நாதன் குல்டர் நைல் மற்றும் ஆடம் செம்பா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 49 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 9 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிக் லார்கின் தெரிவு செய்யப்பட்டார்.

இதற்கமைய 2019-2020ஆம் ஆண்டு பருவக்கால மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, சிட்னி சிக்ஸர்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இப்போட்டி நாளை சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சிட்னி சிக்ஸர்ஸ் அணி இதற்கு முன்னதாக 2011-2012 பருவக்காலத்தில் அதாவது முதலாவது அத்தியாயத்திலேயே சம்பியன் பட்டம் வென்றது.

இதுதவிர, 2014-2015 பருவக் காலத்திலும், 2016-2017 பருவக்காலத்திலும் இரண்டாம் இடம்பிடித்துள்ளது.

இதேபோல, மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, 2015-2016 பருவக்காலத்திலும், 2018-2019 பருவக்காலத்திலும் இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

# 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணம்

## இறுதிக்குள் பங்களாதேஸ் நுழைவு




தென்ஆபிரிக்காவில் நடைபெற்று வரும் U19 உலக கோப்பை அரையிறுதியில் நியூசிலாந்தை 6 விக்கெட் வித்தியாசத்தில் துவம்சம் செய்து வங்காள தேசம் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

19 வயதிற்கு உட்பட்டோருக்கான 50 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் தொடர் தென்ஆபிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வங்காளதேசம் - நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

டாஸ் வென்ற வங்காளதேசம் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி நியூசிலாந்து அணி களமிறங்கியது.

நியூசிலாந்து அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுக்கு 211 ரன்கள் எடுத்தனர்.

இதையடுத்து, 212 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேசம் அணி களமிறங்கியது. அந்த அணியின் மகமுதுல் ஹசன் ஜோய் அபாரமாக ஆடி சதமடித்தார். அவர் 100 ரன்னில் அவுட்டானார். தவ்ஹித் ஹிரிதோய், ஷஹாதத் உசேன் ஆகியோர் தலா 40 ரன் எடுத்தனர்.

இறுதியில், வங்காளதேசம் அணி 44.1 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 215 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றுள்ளது.

இதன்மூலம் U19 உலக கோப்பை இறுதிப்போட்டியில் வங்காளதேசம் முதல் முறையாக நுழைந்துள்ளது. இறுதிப் போட்டியில் வலுவான இந்திய அணியை வங்காளதேசம் எதிர்கொள்கிறது.

# கொரோனா வைரஸை மாத்திரைகளால் கட்டுப்படுத்த முடியாது

# போலிகளை நம்பி ஏமாற வேண்டாம்

## இலங்கையர்களுக்கு அவசர கோரிக்கை

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் தொற்றை குணப்படுத்துவதாக பிரசாரம் செய்து கடைகளில் விற்பனையாகும் போலி மருந்துகளை நம்பி மக்கள் ஏமாற்றமடைய வேண்டாம் என அவசர கோரிக்கை விடுக்கப்பட்டது.**

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அரசாங்க ஆயுர்வேத வைத்தியர் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் டெனி ஸ்டர் எல்.பெரேரா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

'வைரஸ் என்பது விஞ்ஞானத் துறை மற்றும் மருத்துவத் துறைக்கு எப்போதுமே பாரிய சவாலான ஒரு விடயமாகும்.

எனினும் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதாக இலங்கையில் மருந்துகள் விற்பனையா கின்றன. கொரோனா போன்ற வைரஸை நுண்ணுயிர்க் கொல்லி மாத்திரைகளால் கட்டுப்படுத்த முடியாது.

அத்துடன் இந்த நோயை குணப்படுத்த என்னால் முடியும் என எந்தவொரு நபரால் கூறப்பட்டாலும் விஞ்ஞான ரீதியாக அவ்வாறு செய்ய முடியாது. சீன அதிகாரிகளும் அதற்கு இன்னமும் உரிய மருந்தைக் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளனர்.

நான் இலங்கை கடைகளில் லேபல் மாற்றி விற்பனை செய்யப்படும் மருந்துகளை அவதானித்தேன். அவற்றை நம்பி ஏமாற வேண்டாம் எனக்கோரிக்கை விடுக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## யாழ். நகரத்திட்டத்தை அமுல்படுத்த ரொறண்டோ மாநில அரசு தயார்

### மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரத்தின் நீண்ட காலத் திட்டத்தை தயார் செய்ய கனடா நாட்டின் ரொறண்டோ மாநில அரசு தயாராகவுள்ளதாக யாழ்.மாநகர சபை முதல்வர் இ. ஆனல்ட் தெரிவித்தார். யாழ்.மாநகரசபைக்கும் ரொறண்டோ மாநில அரசுக்குமிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் குறித்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாடாக குறித்த மாநிலத்தின் நிபுணர் குழு யாழ்ப்பாணம் வருவதற்கான அனுமதியை ரொறண்டோ மாநில நிர்வாகம் வழங்கியுள்ளது.

இந் நிலையில் குறித்த திட்டத்திற்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வெகு விரைவில் வழங்கும் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 8ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொள்வார். (இ-5)

## சிறையில் மர்மக்காய்ச்சல் இருவர் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் மர்மக் காய்ச்சலால் இருவர் உயிரிழந்த நிலையில் இன்புளுவன்ஸா காய்ச்சல் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் மர்ம நோய் காரணமாக இருவர் உயிரிழந்தனர். இந்தக் காய்ச்சல் என்ன என்பது இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்பதால் சிறைச்சாலையில் உள்ள ஏனைய கைதிகள் அச்சத்தில் உள்ளனர்.

அத்துடன் இந்த மர்மக் காய்ச்சலால் நாட்டில் மீண்டும் இன்புளுவன்ஸா காய்ச்சல் தலைதூக்கியுள்ளது.

இந்நிலையில் வெலிக்கடை சிறைச்சாலையில் பரவும் காய்ச்சல் என்ன என்பதனை அடையாளம் கண்டு சிகிச்சை வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. உயிரிழந்தவர்களில் ஒருவர் 18 வயதுடைய இளைஞர் என்பதும் அவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)


## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
09 – 12 – 1967



இறப்பு
07 – 02 – 2009

**அமரர். அருளானந்தம் அருள்றூபன் (சிறி)**

சோகத்தின் சுமையதனைச் சுமக்கின்றோம் இதயமதில்
பாசத்தின் உறவுகள் நாம் பரிதவித்து வாழ்கின்றோம்
நேசத்தை மறந்து நெடுந்தூரம் சென்றதேனோ
கனத்த இதயங்களோடு பரிதவிக்கின்றோம்!

2064

தபாற்கந்தோர் அருகாமை
யோகபுரம் மல்லாவி

தகவல்:
அம்மா, மனைவி, மகன்,
சகோதரர்கள், மருமக்கள்.



## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச தின உலகப் பெருமஞ்சத் திருவிழா



காலம்: 08.02.2020 சனிக்கிழமை
காலை: 6 மணிக்கு பாற்குடப்பவனி ஆரம்பமாகும்.
மாபெரும் பொங்கல் விழா காலை 10 மணி-மாலை 4 மணிவரை நடைபெறும்.

இரவு 7 மணிக்கு நூற்றாண்டு பழைமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வரும் நிகழ்வும் தமிழரின் பாரம்பரிய கலை ,கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

முருகன் அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். பாற்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் முற்பதிவுகளை மேற்கொள்ளவும். சி-9166

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
K.K.S. வீதி, கோண்டாவில்
முத்தட்டு மடம் வைரவர்
கோவில் முன்பாக.

கணேசன் ஸ்ரோர்ஸ்
K.K.S. வீதி,
இணுவில் சந்தி.



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9161)

**ரெங்கசாமி** கண்டி. அம்பத்தன்ன - 077 112 3471
Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# சிவராத்திரியை முன்னிட்டு யாழிலிருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரிப்பெருவிழாவை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையின் திருக்கேதீஸ்வர திருத் தல பாதயாத்திரை எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை செல் வச்சந்நிதி முருகன் ஆலயத்தி லிருந்து முதன்மை நெறிப்படுத் துநர் வேல்சாமியார் தலைமை யில் காலை 7 மணியளவில் ஆர ம்பமாகி நல்லை ஆதீனத்தை வந்தடைந்து பின்னர் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் இருந்து ஆரம்பமாகி எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை திருக்கேதீஸ்வரத்தை பாதயாத்திரை குழு சென்றடையவுள்ளது. (இ-7)

# ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 173 ஆவது இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூத ரகத்தின் அனுசரணையுடன் சற் குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 173 ஆவது இசை ஆராதனை எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட் கிழமை வட இலங்கைச் சங்கீத சபையின் கலையரங்கத்தில் காலை 9 மணியளவில் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரு மான செ.சந்திரராஜா தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், சிறப்பு விருந்தினாக வட-மாகா ணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கல ந்து கொள்ளவுள்ளனர். (இ

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## இராசிக் குறியீடுகளை பயன்படுத்தும் விதம்




**மிதுனம்**

மிதுன இராசியின் உருவம் இரட்டையர் ஆகும். அதாவது ஒரு ஆணும், ஒரு பெண்ணும் சேர்ந்திருப்பது போன்ற உருவ அமைப்பாகும். அதாவது சக மனிதர்க ளோடு சேர்ந்திருப்பதே பெரிதும் விரும்புபவர்கள் மிதுன இராசியினர். மனிதர்கள் சந்திக்கும் போது அவர்களுக் குள் பேச்சுவார்த்தை நடக்கும்.

மிதுன இராசிக்காரர்கள் நட்பு விரும்பி கள், தனிமையில் அவர்களால் இருக்க முடியாது. எப்பொழுதும் யாரிடமாவது பேசிக்கொண்டிருப்பதையே விரும்புவார் கள். இவர்கள் நல்ல தூதுவர்களாக செயற்படுவார்கள். மனிதர்களை பெரிதும் நேசிப்பார்கள். எதிர்பாலார் மீது இவர்க ளுக்கு அதிக நாட்டம் இருக்கும். காதல் உணர்வு அதிகமாக இருக்கும்.

# யாழில் நாளை தொழிற்சந்தை

(யாழ்ப்பாணம்)

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் யாழ்ப்பாண மாவ ட்ட செயலகமும் இணைந்து நட த்தும் தொழிற்சந்தை நாளை சனிக் கிழமை காலை 8.30 மணி தொட க்கம் 2.30 மணிவரை யாழ்ப் பாண மாவட்ட செயலக வளாகத் தில் நடைபெறும்.

இதில் அரச/தனியார் நிறுவ னங்களில் வெற்றிடமாகவுள்ள சகல பதவிகளுக்குமான ஆட்சேர் ப்பு இடம்பெறும். இதற்காக யாழ். மாவட்டம் மற்றும் வெளி மாவ ட்டங்களில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தொழிற்கல்வியை தொடர விரும்பின் அதுதொடர் பான விபரங்களையும் இத்தொ ழிற்சந்தையில் கலந்து கொள்வ தன்மூலம் பெற்றுக்கொள்ள முடி யும்.

இதில் கலந்து கொள்வதற்காக வருகைதரும் போது நேர்முகத் தேர்வு ஒன்றை எதிர்கொள்வதற் குத் தேவையான ஆவணங்க ளுடன் சமுகமளிப்பது விரும்பத் தக்கதாகும் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிர தீபன் அறிவித்துள்ளார். (இ-7)



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் நிறுவுநர் தினவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் தி.மதிவதனன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சா.சுதர்சன் கலந்துகொண்டு நினைவுப்பேருரையாற்றியதுடன், மாகாணமட்ட குழுநிலை சங்கீதப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

# ஐந்து விடயங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயல கமும் தென்மராட்சி கலாசார அதிகார சபையும் இணைந்து நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அண்மையில் பாடசாலை மாண வர்களிடையே "மது மற்றும் போதை ஒழிப்பு", "நஞ்சற்ற உண வும் போசாக்கும்", "சிறுவர் துஷ் பிரயோகம்", "ஜீவகாருண்யமாக வாழுதல்", "பொலித்தீன் பாவ னையிலிருந்து மீளுவோம்" எனும் ஐந்து விடயங்களிலும் விழிப்பு ணர்வை ஏற்படுத்துமுகமாக கருத்தரங்கும் சித்திரபாட பயிற் சிப்பட்டறையும் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் திருமதி. வினோஜிதா கௌசிகன் தலைம யில் கலைஞானி கே .ரீ.குமரநா தன் வளவாளராகக் கலந்து கொண்ட இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் பாடசாலை அதிபர் ச.பவளகுமரன், முத்தமிழ்மதி க.துரைசிங்கம், கலாசார அதிகார சபை உறுப்பினர் சு.நிதர்சன் மற்றும் கலாசார உத்தியோகத் தர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்ட னர்.

திறம்பட ஓவியங்களை வரை ந்த மாணவர்களுக்கு பரிசில்க ளும் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சித்திரப்பா டம் தொடர்பான கருவிகளும் வழங்கப்பட்டன. (இ-114)

## இராசி பலன்

**மீனம்** – தொழில் வளர்ச்சியுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங் கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பெரிய மனிதர் களின் தொடர்புகள் அனு கூலம் தரும், தாழ்ந்த சுபாவ முண்டு.

**மேடம்** – வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந் தனை ஆற்றலால் சிறப்ப டைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆன்மீக சிந் தனை மேலோங்கும் நாள்.

**இடபம்** – உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தன்னம் பிக்கையுடன் பணி புரிவீர் கள், சுபநிகழ்வுகளில் புதிய வர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுக முண்டு.

**மிதுனம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி அதி கரிக்கும், சேமிப்பை அதிக ரிக்கும் எண்ணம் உருவா கும், இனிய செய்திகள் வந்து சேரலாம், கணபதி வழி பாடு காரிய வெற்றி தரும்.

**கும்பம்** – கடன் பிரச்சினைகளை சாம ர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தொலைபேசி வழி யில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | ராகு |
| புத | இராசி பலன் | | சந் |
| சூரி | கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை, மூலம் | | |
| சனி. கேது.குரு | செவ் | | |

07.02.2020
தை 24, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 5.01 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 10.54 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை
சுபமுகூர்த்த நாள்
பகலில் அக்கம் பக்கம் பார்த்துப் பேசு.
இரவில் அதுவும் பேசாதே

வளவன்

**கடகம்** – எப்படி நடக்கமோவென நினைத்த காரியம் நல்லவித மாக அமையும், பயணத் தால் பலனுண்டு, வழிபாட் டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**மகரம்** – நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப் பீர்கள், விட்டுப்போன உறவு கள் மீண்டும் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையு ண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** – உறவினர்களைக் காண பய ணமொன்றை மேற்கொள் வீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மாற்றங்களால் ஏற்றம் பெறு வீர்கள், சயன சுகக் குறை வான நாள்.

**தனுசு** – குடும்பப் பெரியவர்கள் உங் களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வழிபாட் டால் மகத்துவம் காண வேண் டிய நாள், வேலைகள் உட னுக்குடன் முடியாமல் தாமத மாகலாம்.

**விருச்சிகம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுறுசுறுப்போடு செயற்படு வீர்கள், பூர்வீகச் சொத் துக்களால் நன்மையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** – குடும்பத்தினர்களின் ஒத்து ழைப்புக் கிடைக்கும், செய் தொழிலில் சிறப்புகள் பெறு வீர்கள், காரிய அனுகூல முண்டு, புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும் நாள்.

**கன்னி** – சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெற லாம், விரதங்களில் நம்பி க்கை கூடும், செல்வ நிலை உயரும், எடுத்த காரியங் களில் முன்னேற்றமுண்டு.

## 20 ஆவது அகவையில் 10ஆம் ஆண்டு நினைவுகளுடன்

## சண்முகநாதன் அருள்நங்கை ஆகியோரின் செல்வப்புதல்வன் சந்துதனுக்கு சமர்ப்பணம்



**07.02.2000 - 07.02.2020**

# ச.சந்துதன்



20 ஆவது அகவையில் உம்மைப் பிரிந்து 10 ஆண்டுகள் சென்றதை எண்ண முடியவில்லை. பாலகனாய் இருந்த காலம் முடிந்து பருவ வயதில் இருக்கும் இந்தக் காலத்தை எண்ணி குமுறுகின்றோம் எம் அருமை மகனே!

உன்னுடைய இன்றைய தோற்றம் எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார்க்கின்றோம். அந்த தோற்றத்தில் மீண்டு வரமாட்டாயா என்று ஏங்கித் தவித்து நிற்கும் எம்மை நீ எண்ணவில்லையா எமது அன்பு குட்டி சந்துதா.

காலமெல்லாம் எம்மை கண்ணீரோடு வாழ விட்டுவிட்டு கலக்கமில்லாமல் நீ சென்று விட்டாய். உன் அருமை அப்பாவும், உன் சகோதரரும் உனை நினைத்து வாழும் உன் தாயையும் ஒரு தடவையேனும் உனை பார்க்க மாட்டோமா என்று கனவுகளுடன் வாழும் பொய்யான வாழ்வை வாழ்வது உன் கண்ணுக்கு தெரியவில்லையா என் அழகு மகனே!

உன் பிறந்த நாள் என்றால் எமக்கு மட்டுமல்ல உன் உற்றார், உறவினர், நண்பர் என்ற எல்லோருக்குமே குதூகலமான நாளாக அன்று ஒன்றாக கூடி உண்டு மகிழ்ந்த அந்த ஒன்பது ஆண்டுகளை யாரால் தான் மறக்க முடியும் எம் செல்ல மகனே!

எவ்வளவு தான் செல்வம் இருந்தாலும் அது எம் அன்புச் செல்வத்திற்கு ஈடாகாது மகனே! நீர் பிறந்த இந்த நாளை நீர் இல்லாமலே உன் சகோதரர்கள் கொண்டாடும் கொடுமையை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை ராசா.



உன் நினைவுகளை நெஞ்சிலே சுமந்து சுமந்து நெஞ்சு பாரமாயிருக்கிறது. கண்கள் உன் வரவை நாடி காத்திருக்கின்றது. வர மாட்டாய் என்பது நிச்சயம். ஆனாலும் வருவாய் என்ற நம்பிக்கையில் நீ துயிலும் இல்லத்தில் காத்திருக்கும் உன் அப்பாவின் ஏக்கத்தை தீர்க்க மாட்டாயா எம் தங்க மகனே!

இவ்வுலகில் நாம் இந்த நாளில் வாழ்த்தியது போதாதென்று விண் உலகில் விண்ணவர்கள் வாழ்த்த நீ சென்றதன் காரணம் புரியவில்லை. முன் செய்த வினையோ விதியின் சதியோ என்று விளங்கவில்லை மகனே! மண்ணவரும் விண்ணவரும் உனை வாழ்த்தும் இந்த நாளை உயிருள்ள காலம் வரை மறக்க முடியுமா என் தெய்வ மகனே! வாழ்க நீ விண்ணுலகில் என்று கனத்த நெஞ்சுடனும் அடிவயிற்றில் நெருப்புடனும் வாழ்ந்து கொண்டிருக்கும்.



**லக்ஸ்மி,
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.**

**பெற்றவரும்,சகோதரர்களும்,
உற்றவரும்.**

(C-9149)

# தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் அடித்துப் படுகொலை!

## வவுணதீவில் சம்பவம்

(வவுணதீவு)

மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் அடிகாயங்களுடன் மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை வவுணதீவிலுள்ள அரசி ஆலைக்கு அருகில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் அடிகாயங்களுடன் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த வவுணதீவு பொலிஸார் இது தொடர்பான தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# 14 உயர் பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதிக்கு அமைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மூவர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் 14 பேர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நேற்று இடமாற்றம் செய்யப்பட்டனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மூவர், பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் 6 பேர், பொலிஸ் பரிசோதகர்கள் 3 பேர் ஆகியோரே இவ்வாறு இடமாற்றம் பெற்றனர். (ஐ)

# 50,000 பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலைவாய்ப்பு

## அமைச்சரவை அனுமதி-பந்துல



(கொழும்பு)

50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலைவாய்ப்பை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. -இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கமைய 2012 முதல் 2019 வரை பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கு உள்வாரி மற்றும் வெளிவாரி என்ற பேதமின்றி வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலை ஆசிரியர்கள், நீர்ப்பாசனம், விவசாய அபிவிருத்தி, கணக்கெடுப்புத்துறை மற்றும் அமைச்சகங்களில் உள்ள வெற்றிடங்களில் மார்ச் முதலாம் திகதி முதல் ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்றும் அவர்களுக்கு ஓராண்டு பயிற்சி அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அவர்கள் ஐந்து வருடம் அந்தத் துறைகளில் கட்டாயமாகப் பணியாற்ற வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் ஆலய பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணியளவில் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் நடைபெறும். (இ-5)






யாழ்.பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையில் பணியாற்றும் முனைவர் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் நேற்று முன்தினம் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரனை சந்தித்து தான் பெற்ற "மொழியியல் விருது" குறித்து கலந்துரையாடினார். தமிழ் நாட்டு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியால் அண்மையில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் முனைவர் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் உலகத் தமிழ் சங்கவிருதுகள்-2019 இன் கீழ் மொழியியல் விருதும் ஒரு இலட்சம் ரூபாய் பணப்பரிசும் வழங்கிக்கௌரவிக்கப்பட்டார். முப்பது ஆண்டுகால விரிவுரை அனுபவத்தைக் கொண்ட பேராசிரியை மொழியியல் விருது பெற்றமைக்காகவும் அவரின் தமிழியல் ஆய்வுப்பணிகளையும் பாராட்டியதுடன் அவரின் மொழியியல் பணிகளை மென்மேலும் சிறப்பாகத் தொடரவேண்டும் என துணைத் தூதுவர் கேட்டுக்கொண்டார்.




# புராதன சின்னங்கள் பாதுகாக்கப்படுமா?



யாழ்.நெல்லியடிக்கும் மாலுசந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள புராதன அரசர் காலத்து தொல்பொருள் சின்னங்கள் அழிவடையும் நிலையில் உள்ளன. பிரயாணங்களின் போது இளைப்பாறுவதற்கு மடமும் நீராடுவதற்கான கேணியும் குடிநீர்க்கிணறும் ம்ற்றும் சுமை தாங்கியும் இப்பகுதியில் காணப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தொல்பொருள் சின்னங்கள் காணப்படும் பகுதியை தொல்பொருள் திணைக்களம் தமது பிரதேசமாக எல்லைப்படுத்தி காட்சிப்பலகையை வைத்துள்ளதால் கவனிப்பாரற்று இவைகள் அழிவடையும் நிலை காணப்படுகிறது. பருத்தித்துறை வீதியிலுள்ள தெருமுடி மடத்தை புனரமைப்புச் செய்தது போல தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து பொது அமைப்புக்கள் புனர்நிர்மாணம் செய்வதற்கு முன்வர வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

-அன்பர்-

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பொற்பதி)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மடு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.லோகேஸ்வரன்கலந்து கொள்வார். (இ-64)

●●●●●●●●●●●●●●●●●●●●●●

(யாழ்ப்பாணம்)

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் சோ.தவநடராஜா தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. யோகலிங்கம், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச சபை உறுப்பினர் செ.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

●●●●●●●●●●●●●●●●●●●●●●

(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விரந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் சி.சிவசக்தி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

●●●●●●●●●●●●●●●●●●●●●●

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் சு.மோகனராஜன் தலைமையில் இடம்பெறும்.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன் அறக் கட்டளை நிறுவுநரும் மக்கள் முன்னேற்றக் கூட்டணி செயலாளர் நாயகமுமான கணேஸ்வரன் வேலாயுதம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், கௌரவ விருந்தினராக ஆசிரியர் இ.ராஜகோபால், பழைய மாணவர் சங்க செயலாளர் இ.றமணன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கொரோனா வைரஸ்(Corona Virus)

கொரோனா வைரஸ்

கொரோனா வைரஸ் என்பது தடிமன் முதல் மிகவும் கடுமையான நோய்கள் வரை (உ-ம் கடுமையான சுவாச




நோய் அறிகுறிகள் SARS) மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படுத்தக் கூடிய மிகப்பெரிய வைரஸ் குடும்பமாகும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

**மனித கொரோனா வைரஸ் வகைகள்**

இவ் வைரஸ்களின் மேற்பரப்பு கிரீடம் போன்ற கூர் முனைகளைக் கொண்டிருப்பதனால் கொரோனா வைரஸ்கள்என அழைக்கப்படுகின்றன.

கொரோனா வைரஸ்கள் பிரதானமாக 4 கூட்டங்களாக காணப்படுகின்றன. அவையாவன,

- அல்பா
- பீட்டா
- காமா
- டெல்டா

மனித கொரோனா வைரஸ் முதன் முதலாக 1960களின் நடுப்பகுதியில். கண்டுபிடிக்கப்பட்டது.

7 வகையான கொரோனா வைரஸ் வகைகள் மனிதர்களைத் தாக்கக்கூடியவை என அறியப்பட்டுள்ளது.

**பொதுவான மனித கொரோனா வைரஸ் வகைகள்**

1) 229E (அல்பா கொரோனா வைரஸ்)

2)NL63 (அல்பாகொரோனா வைரஸ்)

3)OC43 (பீட்டா கொரோனா வைரஸ்)

4)HK01 (பீட்டா கொரோனா வைரஸ்)

**ஏனைய மனித கொரோனா வைரஸ் வகைகள்**

5) MERS-CoV (பீட்டா கொரோனா வைரஸ்)

6) SARS-CoV (பீட்டா கொரோனா வைரஸ்)

7) 2019nCoV 2019 novel கொரோனா வைரஸ்

பொதுவாக உலகளாவிய ரீதியில் 229E,NL63, OC43, மற்றும்HK01 போன்ற கொரோனா வைரஸ்களின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

**SARS-CoV (Severe Acute Respiratory Syndrome )**

Severe acute respiratory syndrome corona virus முதன் முதலில் 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சீனாவில் கண்டறியப்பட்டது. இவ் வைரஸின் தாக்கம் உலகம் முழுவதும் 2002-2003 காலப் பகுதியில் கிட்டத்தட்ட 8098 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 774 பேர் மரணமடைந்துள்ளனர். 2004 ஆம் ஆண்டிற்கு பின்னர் உலகளாவிய ரீதியில் இவ் வைரஸின் தாக்கம் காணப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

**MERS-CoV (Middle East Respiratory Syndrome Coronavirus)**


Middle East Respiratory Syndrome Coronavirus முதன் முதலாக 2012 ஆம் ஆண்டு சவுதி ஆரேபியாவில் தாக்கத்தை ஏற்படுத்தியதாக கண்டறியப்பட்டுள்ளது. பின்னர் பல பிற நாட்டைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப் பட்டுள்ளதுடன் அவர்கள் அனைவரும் சவுதி அரேபிய தீபகற்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**2019nCoV (2019 novel Coronavirus )**


2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி சீனாவில் novel (new) கொரோனா வைரஸ் தாக்கம் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அறிவிக்கப்பட்டது. இவ் வைரஸின் தாக்கம் சீனாவின் ஹூபே மாகாணத்தின் வுஹான் நகரத்தில் அதிகளவு காணப்படுவதாக கூறப்படுகின்றது.

**அறிகுறிகள் மற்றும் நோயைக் கண்டறிதல்**

**அறிகுறிகள்**



பொதுவான மனித கொரோனா வைரஸ்களான 229E,NL63, OC43 மற்றும் HKU1 இனால் பொதுவாக தடிமன் போன்ற இலேசான சுவாச குழாய் நோய்களை ஏற்படுத்துகின்றன. பெரும்பாலான மக்கள் தங்கள் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் இந்த




வைரஸால் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த நோய்கள் பொதுவாக ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடிக்கும்.

அறிகுறிகளாவன,

- மூக்கு ஒழுகுதல்
- தலைவலி
- இருமல்
- தொண்டைவலி
- காய்ச்சல்
- உடல் நிலை சரியில்லாதது போன்ற உணர்வு

மனித கொரோனா வைரஸ்கள் சில நேரங்களில் நிமோனியா, மூச்சுக்குழல் அழற்சி போன்ற சுவாச நோய்களை ஏற்படுத்தும். இருதய நோய் உள்ளவர்கள், பலவீனமான நோய் எதிர்ப்பு அமைப்பு உள்ளவர்கள், கைக்குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் இலகுவாக இந்நோய்த் தாக்கத்திற்குள்ளாவார்கள்.

மற்றைய மனித கொரோனா வைரஸ்களான MERS-CoV, SARS-CoV ஆகியவை கடுமையான அறிகுறிகளை ஏற்படுத்தக் கூடியவை. MERS-CoV அறிகுறிகளில் பொதுவாக காய்ச்சல், இருமல் மற்றும் மூச்சுத்திணறல் ஆகியவை அடங்குவதுடன் அவை பெரும்பாலும் நிமோனியாவுக்கு முன்னேறும்.



MERS-CoV தொற்றுக்குள்ளானவர்க ளில் 10 பேரில் 3-4 பேர் மரண மடைந்துள்ளனர்.

SARS-CoV அறிகுறிகளில் பெரும்பாலும் காய்ச்சல், தடிமன் மற்றும் உடல் வலி என்பவை அடங்குவதுடன் அவை பெரும்பாலும் நிமோனியாவுக்கு முன்னேறும்.

உலகெங்கிலும் 2004 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை SARS-CoV வைரஸ் தொற்று பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கண்டறிதல்**

உங்களுக்கு கடுமையான நோய்த்தாக்கம் அல்லது MERS இருப்பதாக சந்தேகிக்கப்பட்டால் உங்களுடைய சுவாச மாதிரிகள் மற்றும் இரத்தத்தின் ஒரு பகுதியை ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்துமாறு வைத்தியரினால் ஆலோசனை வழங்கப்படலாம்.

அறிகுறிகள் காணப்பட்டால் உங்களுடைய அண்மைய பயண விபரங்கள் மற்றும் விலங்குகளுடனான தொடர்பு பற்றி வைத்தியரிடம் தெரிவித்தல் வேண்டும்.

அரேபிய தீபகற்பத்தில் உள்ள நாடுகளில் பெரும்பாலான MERS-CoV நோய்த் தொற்றுக்கள் பதிவாகியுள்ளன. எனவே MERS-CoV கண்டறிய முயற்சிக்கும் போது பயண வரலாறு. ஒட்டகங்கள் மற்றும் ஒட்டக தயாரிப்புக்களின் பயன்பாடு தொடர்பான விபரங்களை வைத்தியருக்கு தெரிவிப்பது அத்தியாவசியமானதாகும்.

**பரவலடையும் முறை**

மனித கொரோனா வைரஸ்கள் பொதுவாக பாதிக்கப்பட்ட நபரிடம் இருந்து பரவுகின்றது.

- இருமல் மற்றும் தும்முவதனால் காற்றில் பரவுகின்றது.
- தனிப்பட்ட நெருங்கிய தொடர்புகள் மற்றும் கைகொடுத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம்
- வைரஸ் உடைய பொருட்கள் மேற்பரப்பைத் தொடுதல் கைகளை கழுவும் முன் வாய், மூக்கு, கண்களை தொடுவதன் மூலம்.
- மல மரசுபாடு (அரிதாக)

**என்னை எப்படி பாதுகாத்துக் கொள்வது**

மனித கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்கு தடுப்பூசிகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் உங்கள் தொற்று அபாயத்தைக் குறைக்க முடியும்.

- குறைந்தது 20 விநாடிகள் சவர்க்காரம் இட்டு அடிக்கடி உங்கள் கைகளை கழுவுதல் வேண்டும்.
- கழுவப்படாத கைகளால் உங்கள் கண்கள், மூக்கு. வாய் தொடுவதை தவிர்க்கவும்.
- நோய்வாய்ப்பட்டவர்களுடனான நெருங்கிய தொடர்பை தவிர்த்தல்.

**மற்றவர்களை எப்படி பாதுகாத்துக் கொள்வது**

உங்களுக்கு தடிமன் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் மற்றைவர்களைப் பாதுகாக்க முடியும்.

- நீங்கள் நோய்வாய்ப் பட்டிருந்தால் வீட்டிலேயே இருங்கள்.
- மற்றையவர்களுடனான நெருங்கிய தொடர்புகளை தவிர்த்தல்.
- நீங்கள் இருமும் போது அல்லது தும்மும் போது உங்களின் வாயையும் மூக்கையும் திசுவினால் மூடி இருமுங்கள். அல்லது தும்முங்கள். பின் அத் திசுத்தாளை குப்பையில் இட்டு கைகளைக் கழுவுங்கள்.
- பொருட்கள் மற்றும் மேற்பரப்புக்களை தொற்று நீக்கியினால் தொற்றுநீக்கம் செய்தல்.

**சிகிச்சை**

மனித கொரோனா வைரஸ்களால் ஏற்படும் நோய்களுக்கு குறிப்பிட்ட சிகிச்சைகள் எதுவும் இல்லை. இந் நோய்கள் தாமாகவே குணமடையும். இருப்பினும் பின்வரும் விடயங்களை மேற்கொள்வதன் மூலம் போக்க முடியும்.

- வலி மற்றும் காய்ச்சலிற்கான மருந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள். (எச்சரிக்கை- குழந்தைகளுக்கு அஸ்பிரின் வழங்க வேண்டாம்).
- தொண்டைப் புண் மற்றும் இருமலைக் குறைக்க ஈரப்பதமூட்டிய அறை அல்லது சூடான நீரில் குளித்தல்.

**நீங்கள் இலேசாக நோய் வாய்ப்பட்டிருந்தால்**

- ஏராளமான நீராகாரங்களை எடுக்கவும்.
- வீட்டில் தங்கி ஓய்வெடுக்கவும்.

அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

ம.தினேஸ்
(N.Dip.in Teaching Science,B.ed)
இணைப்பாளர் (e-தக்சலாவ)
e-கற்றல் மற்றும் நெனச
கல்வி அலகு
கல்வி அமைச்சு இசுறுபாய
பத்தரமுல்லை.

**புதிர் 236 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

செல்வி.ரூபிகா
அருந்தவம்
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

இலங்கைத் தீவு அமைந்துள்ள வங்காள விரிகுடாவின் பரப்பளவும் km² இல் எவ்வளவு? 2.172.000 km²

## வாரத்திற்கு ஒரு புதிர்! 237

ஏற்றங்களை சேமிப்பதற்கான ஒரு சாதனமே கொள்ளளவியாகும். கொள்ளளவியின் கொள்ளளவம் அளக்கப்படும் அலகுயாது?

புதிர் 237 இற்கான விடைகளை 17.02.2020 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

அ.குகன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 237**

சரியான விடை:-........................................
முழுப்பெயர்:-........................................
முகவரி:-........................................
தொ.பே. இல:........................................
கையொப்பம்:........................................

# கொரோனா தாக்கம் நீங்க மன்னாரில் விசேட வழிபாடு





(மன்னார்)

உலகளாவிய ரீதியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ள "கொரோனா" வைரஸின் தாக்கம் நாட்டிலிருந்து முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும் வைரஸினால் பாதிக்கப்பட்ட அனைவரும் சுகம் பெற வேண்டியும் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் பிரித்தோதல் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக மன்னார் மற்றும் அநுராதபுரத்திலுள்ள 12 பௌத்த பிக்குகளை அழைத்து வைரஸ் தாக்கம் முற்றுமுழுதாக நீங்க வேண்டும் என்றும் அதே போன்று உலகம் முழுவதும் வைரஸினால் பாதிக்கப்பட்ட அனைவரும் விரைவில் சுகம் பெற வேண்டும் என்ற அடிப்படையிலும் விசேட பிரித்தோதல் நிகழ்வு நடைபெற்றது.

குறித்து பூஜை வழிபாட்டு நிகழ்விற்கு மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன், மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (9-285)

# சாதனையாளர் கௌரவிப்பு




(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு வலயப்பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு விழா நிகழ்வு நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.

வலயகல்வி பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் அஞ்சலிதேவி சாந்தசீலன் கலந்துகொண்டார்.

இதன்போது கடந்த 2018/2019 ஆம் ஆண்டுகளில் வடக்கு வலயத்திற்குட்பட்ட பல பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி மாணவர்களின் கல்வி செயற்பாட்டில் சாதனைகளை நிலைநாட்டிய அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் ஆரம்பக்கல்வி பிரதி கல்வி பணிப்பாளர் அ.சற்குணராசா, இலங்கை திருச்சபை பாடசாலை அதிபர் இ.நவரட்ணம், நெடுங்கேணி மகாவித்தியாலய அதிபர் செ.பவேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (9-299)




# முழு நிலா நாள் கலைவிழா

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் அனுசரணையுடன், துணுக்காய் கல்வி வலயம் நடத்தும் 'முழு நிலா நாள் கலைவிழா" நிகழ்வுக்கு கலையார்வம் கொண்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலய விழா ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த நிகழ்வு ஏ-9 வீதியில் உள்ள மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தின் உள்ள கலையரங்கத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மாலதி முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் வ.வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கலை நிகழ்வின் போது, துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் இயல், இசை, நாடக நிகழ்வுகள் அரங்கத்தில் நிகழவுள்ளதால் கலையார்வம் கொண்ட அனைவரையும் வருகை தருமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளார்கள்.(9-15)

# மன்னாரில் நெல் அறுவடை விழா




(மன்னார்)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பரப்பாங்கண்டல் கிராமத்தில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நெல் அறுவடை விழா (வயல் விழா) இடம்பெற்றது.

மன்னார் விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நெல் அறுவடை விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் கலந்து கொண்டார்.

இதன்போது "சுகந்தல்" எனும் நெல் அறுவடை செய்யப்பட்டது. குறித்த நெல் அறுவடை விழாவில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-285)

### கிளிநொச்சி தருமபுரம் பகுதியில்

# கைவிடப்பட்ட கட்டடங்களுக்குள் சமூக சீர்கேடுகள் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை





(தருமபுரம்)

தருமபுரம் மத்திய கல்லூரிக்குச் சொந்தமான பழைய ஆசிரியர் விடுதி மற்றும் கண்டாவளை கோட்டக்கல்வி அலுவலமாக இயங்கி வந்த கட்டடம் ஆகியன கைவிடப்பட்ட நிலையில் இருப்பதால் அங்கு சட்டவிரோத செயல்கள் இடம்பெறுவதாக தருமபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த கட்டடங்களில் குற்றச் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை பலர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும் இங்கு சமூக சீர்கேடுகள், சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கின்றனர். இவ் விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-316)

# வழிபட சென்றவர் விபத்தில் காயம்



(நெளுக்குளம்)

வவுனியா நெடுங்கேணி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் பேருந்து நடத்துநர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த விபத்து தொடர்பாக தெரியவருகையில்,

முல்லைதீவில் இருந்து வவுனியா நோக்கிச்சென்ற தனியார் பேருந்து நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் ஆலயத்தில் வழிபாட்டிற்காக நிறுத்தப்பட்டது. இதன்போது பேருந்தின் நடத்துநர் ஆலயத்தின் உண்டியலில் பணத்தினை இடுவதற்காக வீதியைக் கடந்து சென்ற போது திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த கார் அவரை மோதியுள்ளது.

விபத்தில் பேருந்தின் நடத்துநர் காயமடைந்த நிலையில் நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். விபத்து தொடர்பாக நெடுங்கேணி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (9-299)

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதை மருந்துகளின் பாவனை அதிகரிப்பு

## கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட திட்டம் வவுனியாவில் முன்னெடுப்பு

(நெளுக்குளம்)

வவுனியாவில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதை மருந்துகளின் பாவனைகள் அதிகரித்து வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்தி நல்லதொரு சமூகத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் வர்த்தக சங்கத்தின் ஒழுங்கமைப்பில் வவுனியா மாவட்ட மருந்தக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவிலுள்ள வர்த்தக சங்க காரியாலயத்தில் நேற்று முன்தினம் வர்த்தக சங்க செயலாளர் ஆறுமுகம் அம்பிகைபாலன் தலைமையில் இடம்பெற்றது.



வவுனியா மருந்தக நிலைய உரிமையாளர்கள் தமது நிலையங்களில் தகுதி வாய்ந்த மருந்தாளரை பணிக்கு அமர்த்தி மருந்துகளைக் பெற்றுக்கொள்ளச் செல்லும் நோயாளர்கள் வைத்தியரினால் எழுதிக் கொடுக்கும் மருத்துவச்சிட்டைக்கு மட்டும் மருந்து வகைகளை வழங்கவும் சகல மருந்தகங்களுக்கும் குளிரூட்டி அமைக்கப்பட்டு மருந்துகள் பழுதின்றி பராமரிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் சில மருந்து வில்லைகளை மாணவர்கள் அளவுக்கு அதிகமாக உட்கொள்வதால் ஒருவித போதை ஏற்படுவதையும் இதனால் மாணவர்கள் அவ்வில்லைகளை பாடசாலைகளுக்கு எடுத்துச் செல்லும் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்று வருவதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் அவ் வில்லைகளை அளவிற்கு அதிகமாக வழங்குவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் மருந்தகங்களுக்கு மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளும்போது தகுதிவாய்ந்த நிறுவனங்களை நாடிப் பெற்றுக்கொள்ளுமாறும் கறுப்புச் சந்தை வியாபாரங்களை தவிர்க்குமாறும் மருந்தக நிலைய உரிமையாளர்களுக்கு பொலிஸாரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்கலந்துரையாடலின்போது பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் மகேந்திரன், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர். மானவடு, சுகாதார வைத்திய அதிகாரி யூட் பீரிஸ், உணவு மருந்து சுகாதார பரிசோதகர் பார்த்தீபன், நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (9-299)

# 18 லீற்றர் கசிப்புடன் குடும்பப்பெண் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்று பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குடும்பப்பெண் ஒருவரை தருமபுரம் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

அவரிடம் இருந்து 18 லீற்றர் கசிப்பையும் கைப்பற்றியுள்ளதுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (9-316)

# முழுநிலா கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாதாந்த முழுநிலா கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் கல்விப் பிரிவு ஆலோசகர் கோ.நாராயணன் கலந்து கொண்டு, இந்திய அரசினால் இலங்கையில் மேற்கொள்ளவுள்ள புலமைப்பரிசில் திட்டங்களும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளும் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

புலமைப்பரிசில் மூலம் மேற்படிப்பை விரும்பும் அரச, அரச சார்பற்ற அலுவலர்கள், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (9)

# போக்குவரத்து வசதிகளின்றி அல்லலுறும் மாந்தை கிழக்கு மூன்றுமுறிப்பு கிராம மக்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மூன்றுமுறிப்பு கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் சுமார் 196 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பின்தங்கிய கிராமமாகக் காணப்படும் மூன்றுமுறிப்பு கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் குறித்த கிராமத்தில் வாழும் மக்கள் அன்றாடம் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதாவது, மூன்று முறிப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழுள்ள வீரப்பிராயர்குளம், இளமருதன்குளம், மூன்றுமுறிப்பு, கொம்பு வைத்தகுளம் உள்ளிட்ட கிராமங்களில் தற்போது 196 குடும்பங்களைச்சேர்ந்த 611 பேர் வரையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் மேற்படி கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மை, பிரதான வீதி புனரமைக்கப்படாமை என்பவற்றால் இப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதாவது, குறித்த கிராமத்தில் எதுவித அடிப்படை வசதிகளும் இன்மையால் கிட்டத்தட்ட 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பாண்டியன் குளம் அல்லது அதற்கு அப்பால் சென்று தமது தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிலையில் குறித்த கிராமத்திற்கான பிரதான வீதி நீண்டதூரம் காட்டுப் பாதையாக காணப்படுவதனால் இரவு வேளைகளில் பயணம் செய்ய முடியாது காட்டு யானைகளின் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வாறு துன்பங்களை அனுபவித்து வரும் தங்களின் நிலையினை கருத்திற்கொண்டு பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித்தருமாறும்' பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# மாணவன் மீது தாக்குதல்

(பரந்தன்)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் உயர்தரப் பிரிவு இறுதியாண்டில் கல்வி கற்கும் மாணவனை திருநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் தாக்கியதில் காயமடைந்த மாணவன் கிளிநொச்சி பொது வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பாடசாலை முடிவடைந்து வீடு செல்லும் போதே மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மாணவனின் தந்தை தெரிவிக்கையில் கல்வியில் முதன்மை நிலையில் உள்ள மாணவர்களில் எனது மகனும் ஒருவர் அவரின் கல்வியை குழப்பும் முகமாக இவ்வாறான நடவடிக்கைகளை செய்து வருகின்றனர் எனது மகனுக்கு நடந்த அநீதி எவனுக்கும் நடக்கக்கூடாது.

குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியினருக்கும் எனக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஆரம்பத்தில் இருந்துள்ளது.

எனது குடும்பம் ஓர் முஸ்லீம் குடும்பம் எவ்வாறு கிளிநொச்சியில் வாழ போகின்றீர்கள் என அக்கட்சியை சார்ந்தவர்கள் என்னை அச்சுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் இந்த தாக்குதல் சம்பவமும் இடம் பெற்றுள்ளது என சந்தேகிப்பதாக தெரிவித்தார். (9-312)




# வளப்பற்றாக்குறை காரணமாக மக்களுக்கான சேவையை சீராக வழங்க முடியவில்லை

## கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு கரைதுரைப்பற்று பிரதேச சபையில் நிலவும் பௌதீக மற்றும் ஆளணி வளப்பற்றாக்குறைகள் பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதற்கு பெரும் சவாலாக காணப்படுவதாக கரைதுரைப்பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் கனகையா தவராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கரைதுரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபைக்குச் சொந்தமான கிராமப்புற வீதிகளில் அதிகளவான வீதிகள் புனரமைக்கப்படாமை, சீரான கழிவகற்றல் மேற்கொள்ளப்படாமை என பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அதாவது கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழுள்ள முல்லைத்தீவு நகரத்தில் உரிய முறையில் கழிவுகள் அகற்றப்படுவதில்லை என பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தவிசாளரை தொடர்பு கொண்டு இதுதொடர்பில் கேட்டபோது, கரைதுறைப்பற்று பிரதேச சபையினை நாற்பது வருடங்களுக்குப் பின்னர் பொறுப்பேற்றுள்ளதாகவும் சபைக்கான வருமானங்கள் எதுவும் இல்லாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் 20 வருடங்களுக்கு முன்பு இருந்த ஆளணி விபரங்களே தற்போது உள்ளபோதும் அதிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அதனைவிட வாகன வசதிகள் வீதிகளைப்புனரமைக்கக்கூடிய வகையில் கனரக வாகனங்கள் இல்லை. மேற்படி சபையின் கீழ் உள்ள 784 கிலோ மீற்றர் வீதிகளில் 60 கிலோமீற்றர் வீதிகள் மாத்திரமே இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளன. ஏனைய வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. அதேபோல போதிய கழிவகற்றல் வாகனங்கள் இன்மையும் ஏனைய வாகன வசதிகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தே தமது சேவைகளை முன்னெடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# இளைஞர் பாராளுமன்ற தேர்தல் வேட்புமனுத் தாக்கல்

(முல்லைத்தீவு)

இள்ளைஞர் பாராளுமன்ற தேர்தல் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.


இந்த தேர்தலுக்கான வேட்பாளர்களின் வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 11.02.2020 மற்றும் 12.02.2020 ஆகிய தினங்களில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வேட்பாளர்கள் உரிய முறைப்படி அன்றைய தினங்களில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும் என மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# பாரதம்

## குழந்தை கடத்தல் கும்பல் எனப் புரளி; விவசாயி ஒருவர் அடித்துப் படுகொலை

### 6 பேருக்கு தீவிர சிகிச்சை



(டில்லி)

மத்திய பிரதேசத்தில் குழந்தை கடத்தல் கும்பல் என தவறாக நினைத்து விவசாயி ஒருவரை கிராம மக்கள் அடித்துக் கொலை செய்தனர். தாரஞ்சி மாவட்டத்தில் விவசாய வேலைக்கு பணம் பெற்றுக் கொண்டு வேலைக்கு வராமல் சிலர் இருந்தனர்.

இதனைக் கண்டித்து பணத்தை திரும்பப்பெற சென்ற 7 பேரை குழந்தை கடத்தல் கும்பல் என்று பணம் பெற்றவர்கள் தவறான புரளியை பரப்பினர். அதை நம்பிய கிராம மக்கள் அவர்களை சரமாரியாக தாக்கினர்.

இதில் கணேஷ் படேல் என்பவர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும் 6 பேர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். பணத்தை திரும்ப அளிக்காமல் தப்பிக்கவே இதுபோன்ற புரளியை பரப்பி கிராம மக்களை தூண்டிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் 12 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (ஜ-2)

## மூன்று துண்டுகளாக சிதறிய விமானம்; மூவர் உயிரிழப்பு; 179 பேர் படுகாயம்





(இஸ்தான்புல்)

மோசமான வானிலை காரணமாக இஸ்தான்புல்லின் சபிஹா கோக்கென் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும்போது விமானம், ஓடு பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், 179 பேர் படுகாயமடைந்தனர்.

ஓடு பாதையை விட்டு விலகி வயலில் வீழ்ந்து விமானம் இவ்வாறு விபத்துக்குள்ளானபோது மூன்று துண்டுகளாக உடைந்தது.

விபத்தைத் தொடர்ந்து எரியும் விமானத்தில் ஏற்பட்ட விரிசல்களின் மூலமாக விமானத்தில் இருந்தவர்கள் வெளியேற்றப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுள் இரண்டு விமானிகளும் உள்ளடங்கியதாக தெரிவித்த அதிகாரிகள் அவர்களது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவித்தனர். (ஜ-2)

## கொரோனாவா

## பலி எண்ணிக்

(பீஜிங்)

**உலகையே அச்சுறுத்திவரும் கெ**
**உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50**
**சுகாதார அமைச்சு தெரிவித்தது.**

உலகளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்று வியாழக்கிழமை 28 ஆயிரத்து 256 ஆக உள்ளது.

மத்திய சீனாவில் கடுமையான தனிமைப்படுத்தல் மற்றும் மக்கள் தொகை கட்டுப்பாட்டு முறைகள் இருந்தபோதிலும் வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவது சற்று சிரமமாக இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால், சீன நிலப்பரப்பில் இருந்து தன்னாட்சி நகரத்திற்குள் நுழையும் அனைத்து மக்களுக்கும் கட்டாய 14 நாட்

கள்
அறி

பர
னை
நா
மே

## ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தி

## ஆப்கானிஸ்தான் மக்கள்

(காபூல்)

ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தொடர்ந்து தலையிடுவதற்கு எதிராக காபூலில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் அருகில் ஆப்கானிஸ்தானியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆப்கானிஸ்தான் விவகாரம் மற்றும் ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தொடர்ந்து தலையிடுவதற்கு எதிராக காபூலில் நேற்று முன்தினம் போராட்டம் நடைபெற்றது. பாகிஸ்தான் தூதரகத்திற்கு வெளியே நடைபெற்ற இப்போராட்டத்தில் ஏராளமான ஆப்கானிஸ்தானியர்கள்



பங்கேற்று, பாகிஸ்தான் அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

எல

## அதிகார துஷ்பிரயோக குற்

## அமெரிக்க ஜனாதிபதி டொ

### செனட் சபை அறிவிப்பு


(வோஷிங்டன்)

அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்களிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுவிக்கப்பட்டதாக செனட் சபை அறிவித்துள்ளது.

உக்ரேய்னுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் தமது எதிர் வேட்பாளரான ஜோபைடனை வீழ்த்த திட்டம் தீட்டிய தாகவும் தம்து அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து செனட் சபையில் இதுகுறித்து விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்தநிலையில் பதவி நீக்கம் செய்யக் கோரும் இரண்டு தீர்மானங்களின் இறுதி வாக்களிப்பில் ட்ரம்ப்



# வெளிநாடு

# ...வால் உச்சமடையும் உயிரிழப்பு

# ...ரிக்கை 563 ஆக அதிகரிப்பு!

**...கொரோனா வைரஸ் பாதிப்பால், ...கை 563ஆக உயர்ந்துள்ளதாக சீனா ...**




...கள் தனிமைப்படுத்தலை ஹொங்கொங் அறிவித்தது.

கொரோனா வைரஸ் மிக வேகமாக பரவி வருவதாலும் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாலும் எதிர்வரும் நாட்களில் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

வுஹான் நகர வைத்தியசாலைகள் நோயாளிகளால் நிரம்பி வரும் நிலையில் 2 புதிய தற்காலிக வைத்தியசாலைகளும் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ...ரத்தில் பாகிஸ்தான் தலையீடு ...கள் எதிர்ப்புப் போராட்டம்



...திராக பாகிஸ்தான் ஒழிக, பாகிஸ்தான் எதிரி என்பது போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

மேலும், பாகிஸ்தானில் உள்ள பஷ்தூன் இன மக்களின் பாதுகாப்புக்காக போராடும், பஷ்தூன் தகாபுஸ் இயக்க தலைவர் மன்சூர் பஷ்தீனை பாகிஸ்தான் அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கோஷமிட்டனர்.

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானில் உறுதியற்ற தன்மையை உருவாக்குவதற்காக, தலிபான் மற்றும் பிற பயங்கரவாத குழுக்களை பாகிஸ்தான் ஆதரிப்பதாக ஆப்கானிஸ்தான் அரசு மீண்டும் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# அணுவாயுதம் தயாரிப்பதை நிறுத்தி மக்களுக்காக செயற்பட வேண்டும்

## ஈரானுக்கு அமெரிக்கா ஆலோசனை



(டெஹ்ரான்)

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதைக் கைவிட்டு தனது நாட்டு மக்களின் நலனுக்காகச் செயற்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆலோசனை வழங்கினார்.

இதுகுறித்து டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில், "ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதைக் கைவிட்டு தீவிரவாதத்தைப் பரப்புவதை நிறுத்தி தனது நாட்டு மக்களின் நலனுக்காகச் செயற்பட வேண்டும்.

பெருமைமிக்க ஈரானியர்கள் அடக்குமுறை ஆட்சியாளருக்கு எதிராக குரல் எழுப்பியதைக் கடந்த மாதங்களில் நாம் கண்டோம். ஏனென்றால் நமது சக்தி வாய்ந்த பொருளாதாரத் தடை காரணமாக ஈரானின் பொருளாதாரம் மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. நாம் இது தொடர்பாக குறுகிய காலத்தில் அவர்களுக்குச் சிறந்த உதவிகளை அளிக்க முடியும்.

நாம் இங்குதான் இருக்கிறோம். அவர்கள் எந்தப் பாதையை தேர்ந்தெடுக்கிறார்கள் என்று பார்க்கலாம். முடிவு முற்றிலும் அவர்களிடமே உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார்.

ஈரானில் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலை 50 சதவீதம் உயர்த்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்த விலை உயர்வு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஈரான் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஈரானில் போராட்டம் வெடித்தது. இந்த வன்முறையில் சுமார் 200 பேர் வரை உயிரிழந்தனர். இதில் போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா ஆதரவளித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ...குற்றச்சாட்டுக்களிலிருந்து ...டொனால்ட் ட்ரம்ப் விடுவிப்பு



...வெற்றி பெற்றுள்ளார்.

செனட் சபையில் பிற்பகலில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தலைமை நீதிபதி ஜோன் ராபர்ட்ஸ் தலைமைதாங்க, செனட் உறுப்பினர்கள் இரண்டு கேள்விகளுக்கு வாக்களித்தனர். முதல் கேள்வி ட்ரம்ப் குற்றவாளியா? குற்றமற்றவரா? என்பது.

இதன்போது குறித்த குற்றச் சாட்டுக்களிலிருந்து டொனால்ட் ட்ரம்ப்பினை விடுவிக்க 52 ஆதரவாகவும் 48 பேர் எதிராகவும் வாக்களித்திருந்தனர்.

அத்துடன் ட்ரம்ப் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தாரா? என்ற வாக்கெடுப்பில் அவர் அவ்வாறு செய்யவில்லை என 53 பேர் வாக்களித்ததுடன் 47 பேர் எதிராக வாக்களித்திருந்தனர்.

ட்ரம்ப் குற்றச்சாட்டுக்களி லிருந்து விடுவிக்கப்பட்டால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடும் என்று ஜனநாயகக் கட்சியினர் எச்சரித்த போதும் செனட் சபை உறுப்பினர்கள் ட்ரம்ப்புக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் ட்ரம்ப் போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# படிப்படியான அபிவிருத்தியே நிலையானது

## ரணில் அரசை சாடிய அங்கஜன்



(சாவகச்சேரி)

நாமும் தேர்தலுக்காக ஆயிரம், பத்தாயிரம் வீடுகளைக் கட்டுகின்றோம் என்று கூறி பணிகளை ஆரம்பிக்க முடியும். ஆனால், நாம் அவ்வாறு செய்ய மாட்டோம் எனத் தெரிவித்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், ரணில் அரசாங்கத்தை மறைமுகமாகச் சாடினார்.

கிராமத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தின் கீழ் சாவகச்சேரியில் அமையவுள்ள வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அண்மையில் கலந்து கொண்டிருந்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாம் தேர்தலுக்காக ஆயிரம், பத்தாயிரம் வீடுகளைக் கட்டுகிறோம் என்று கூறி பணிகளை ஆரம்பிக்கவில்லை.முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் பத்து வீடுகளுக்கான பணிகளைத் தான் ஆரம்பித்துள்ளோம். அபிவிருத்தியை அடையாளமாக, படிப்படியாகத்தான் வழங்க வேண்டும். படிப்படியான அபிவிருத்தியே நிலைபேறான அபிவிருத்தியாக இருக்கும். அதுவே மக்களைச் சென்றடையும். கடந்த காலங்களில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீடுகள் வழங்கப்பட்டு இதுவரை அதற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாமையால் வீட்டு உரிமையாளர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். அவர்களுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

ஆனால், தற்போது புதிய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு எந்த சிக்கலும் வந்துவிடக்கூடாது என்பதற்காக நாம் அதற்கான ஒதுக்கீடுகளைப் பெற்ற பின்னர் தான் வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

எனவே இவர்களுக்கு முழுமையான பணம் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வீடுகளுக்கான அடிக்கல்லை நாட்டி வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் வீடு ஒவ்வொரு குடும்பத்திற்குமான அடிப்படைத் தேவை. நாம் மிகப்பெரிய யுத்தத்தை தாண்டி எமது பிரதேசத்தை படிப்படியாக கட்டியெழுப்பி வருகிறோம். பத்து வருடங்களாக எமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தியடையாத நிலையில் அதனை முழுமையாக பூர்த்தி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடைய வீடுகள் மட்டுமல்லாமல் அமைச்சுக்களிடம் இருந்தும் வீடுகளைப் பெற நடவடிக்கை எடுத்து வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-30)

# கிராமத்திற்கு ஒரு வீடு திட்டத்தின்மூலம் வறுமை நிலையிலுள்ள மக்களை மீட்டெடுக்கலாம்

## தென்மராட்சி பிரதேச செயலர் நம்பிக்கை

(சாவகச்சேரி)

புதிய அரசின் கிராமத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தின் மூலம் வறுமை நிலையில் உள்ள மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை காணப்படுவதாக தென்மராட்சிப் பிரதேச செயலர் தேவந்தினி பாபு தெரிவித்தார். அண்மையில் கிராமத்திற்கு ஓர் வீடு என்ற திட்டத்தில் சாவகச்சேரி பகுதியில் வீடு ஒன்றிற்கு அடிக்கல் நாட்டி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவானது பல்வேறு காலகட்டங்களிலும் யுத்தங்களுக்கு முகம்கொடுத்திருந்தது. இதனால் தென்மராட்சிக்கு பல்வேறு வகையான வீட்டுத் தேவைகள் காணப்படுகின்றன. இன்றும் தென்மராட்சியில் 796 மக்கள் குடிசை வீடுகளில்வாழும்நிலைமை காணப்படுகிறது. கிராமத்திற்கு ஓர் வீடு போன்ற திட்டங்கள் மூலம் எமது பிரதேச செயலர் பிரிவில் வறுமை நிலையில் உள்ள மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் இவ்வாறான திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (ஜ-30)

# கலைநிலம் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவின் கலாசாரப் பேரவை, இந்த வருடமும் பிரதேச மலராகிய ''கலைநிலம் 05'' ஐ வெளியீடு செய்யவுள்ளது.

கலைநிலம் மலரிலே பிரதேசத்தின் பாரம்பரியங்கள், வரலாறுகள், பிரதேச ஆளுமைகள் தொடர்பான தகவல்கள், பண்பாடுகள் தொடர்பான ஆக்கங்களையும் பிரதேச எழுத்தாளர்கள் தமது படைப்புக்கள் சார்ந்த ஆக்கங்களையும் அனுப்பி வைக்க முடியும்.

உடுவில் பிரதேசத்தைச் சாராதவர்களும் உடுவில் பிரதேசம் சார்ந்த வரலாற்றுத் தகவல்கள் முதலான ஆக்கங்களை அனுப்பலாம்.

எனவே மலருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்'' என்ற முகவரிக்கு தங்களது விபரங்களுடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் அறிவித்துள்ளார். (இ





உடுவில் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உடுவில் டச்சு வீதியில் அமைந்துள்ள வசி சமூகநல முன்பள்ளியில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.
(படங்கள்:-குப்பிழான் செய்தியாளர்)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மருள் நீங்கிய மாசறு காட்சி

ஒரு முனிவர். ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருந்தார். சும்மா உட்கார்ந்திருக்கவில்லை.ஓர் ஊசியிலே நூலைக் கோர்த்து தன் வேட்டியிலே இருந்த ஒரு கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்தார். கைதான் கடமையைச் செய்து கொண்டிருந்தது. மனது கடவுளை நினைத்துக் கொண்டிருந்தது. அந்த சமயத்திலே பார்வதியும் பரமசிவனும் ஆகாய வீதியிலே அப்படியே வலம் வந்து கொண்டிருந்தார்கள். மரத்தடியிலே ஒளிப்பிழம்பாக உட்கார்ந்திருந்தார் முனிவர். பார்வதி இதைக் கண்டதும் உடனே பரமசிவன் பக்கம் திரும்பி "அங்கே மரத்தடியிலே பார்த்தீர்களா?'' என்று கேட்டார். "பார்த்தேன்'' என்றார் அவர். "பின் என்ன? அதைப் பார்த்ததற்குப் பின்பு நாம் எப்படிச் சும்மா போவது? வாங்க! அங்கே சென்று அவருக்கு ஏதாவது வரம் கொடுத்துவிட்டு வரலாம்'' – என்றார். பரமசிவன் முகத்திலே புன்னகை. "அவனைப் பற்றி லேசாக நினைத்து விடாதே! அவன் அந்த நிலையையெல்லாம் கடந்தவன். இப்போதைக்கு நாம் அவனிடம் செல்வது எல்லாம் வீண் வேலை. அதனாலே வேண்டாம் ! வா நாம் நம்ம வழியிலே போவோம்'' என்றார்.

இருந்தாலும் பெண்கள் சொன்னால் சொன்னதுதானே பிடிவாதத்திலே விட்டுக் கொடுக்க மாட்டார்களே. அப்படி இருக்கிற போது அம்மை என்கிற மாயா சக்தி ஆண்டவனைச் சும்மா விட்டுவிடுமா? கட்டாயப்படுத்தி மரத்தடிக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டார். வழக்கமாக ஆண்கள் என்ன செய்வார்களோ? அதையே செய்துவிட்டார். அதாவது சொல்வதைச் சொல்லிப் பார்த்து விட்டு வேற வழியில்லை என்று தெரிந்ததும் 'சரி வா' என்று சொல்லிக் கொண்டு கூடவே வந்துவிட்டார். இரண்டு பேரும் வந்து அந்த முனிவர் முன்னாடி நின்று 'வணக்கம்' என்றார்கள்.

முனிவர் நிமிர்ந்து பார்த்தார். "அடடே! அம்மையும் அப்பனுமா! வாங்க!'' என்று சொல்லி அன்பாக வரவேற்றார். தாகத்தோட வந்திருப்பீர்கள் என்று சொல்லி மோர் கொடுத்து உபசரித்தார். அவ்வளவு தான். அதைக் கொடுத்துவிட்டு அவர் பாட்டுக்கு துணி கிழிசலைத் தைக்க ஆரம்பித்துவிட்டார். பரமசிவனும் பார்வதியும் சிறிது நேரம் பொறுமையாக உட்கார்ந்திருந்து பார்த்தார்கள். அவர் நிமிர்ந்து பார்க்கிற வழியைக் காணோம்.

"சரி! நாங்கள் புறப்படுகிறோம்!'' என்று குரல் கொடுத்தார்கள். ''ரொம்ப சந்தோசம் போய் வாருங்கள்! வணக்கம் என்றார்'' முனிவர். அப்படி சொல்லிவிட்டு மறுபடியும் துணியைத் தைக்க ஆரம்பித்தார்.பார்வதி பரமசிவன் பக்கம் திரும்பி 'கேளுங்கள்' என்பது மாதிரிக் கண்ணைக் காட்டினார். அவரும் அதைப் புரிந்து கொண்டு முனிவரைப் பார்த்து ''தவச்செல்வரே! நாங்கள் ஒருவருக்குக் காட்சி தந்துவிட்டால் ஏதாவது வரம் கொடுத்து விட்டுப் போவதுதான் பழக்கம்! அதனாலே உங்களுக்கு ஏதாவது வரம்...!'' என்று இழுத்தார். முனிவர் சிரித்தார்! "வரமா? உங்கள் தரிசனத்தை விடவா? அதெல்லாம் இந்தக் கட்டைக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள்'' என்றார். சொல்லிவிட்டு மறுபடியும் தைக்க ஆரம்பித்தார். இருந்தாலும் பார்வதியும் பரமசிவனும் விடுவது போல் இல்லை!

''ஏதாவது வரம் கொடுக்காமல் நாங்கள் போகமாட்டோம்'' என்று பிடிவாதம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். பார்த்தார் முனிவர் "சரி அப்படி கட்டாயமாக வரம் கொடுத்துவிட்டுத்தான் போகவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் ஒன்று செய்யுங்கள். இந்த ஊசிக்குப் பின்னாலேயே இந்த நூல் போவதற்கு வரம் கொடுங்கள்'' என்றார். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏற்கனவேதான் இந்த ஊசிக்குப் பின்னாலே இந்த நூல் போய்க் கொண்டிருக்கிறதே! இதற்கு நாங்கள் எதற்காக வரம் கொடுக்க வேண்டும் என்றார்கள். அதைத்தான் நானும் கேட்கிறேன்! நான் ஒழுங்கு தவறாமல் நடந்து கொண்டு வந்தால் வரவேண்டிய பலன் நியதிப்படி தானாகப் பின் வருமே! இடையிலே நீங்கள் எதுக்கு வரம் கொடுக்க வேண்டும்? என்று கேட்டார் முனிவர்.

இதைக் கேட்டதும் பார்வதியும் சிவனும் சிரித்துக் கொண்டே அவர்கள் வழியிலே சென்று விட்டார்களாம். இந்த முனிவர் எய்திய காட்சிக்குப் பெயர்தான் மருண் நீங்கிய மாசறு காட்சி என்கிறார் நினைவுக்கலை ஏந்தல் பவின் கவனகர்–திருக்குறள் இராமையா.முப்பது வயதிலே பார்வையை இழந்த இவர் முப்பால் ஒளியைத் துணையாகக் கொண்டவர். நம் காலத்திலே வாழ்ந்தவர். இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு என்னும் குறளிலே வருகின்ற மருள் நீங்கிய மாச்று காட்சி என்ன என்பதை விளக்குவதற்கு அவர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். மனதைத் தூய்மைப்படுத்தத் தவறியவர் இறைவனை நம்பியும் பயனில்லை. இறைவனை நம்பாமல் இருந்தும் பயனில்லை. ஆகவே உண்டு என்பதும் இல்லை என்பதும் உள்ளம் தூய்மையாக இருக்கும் பட்சத்தில் ஒரு புள்ளியில் சென்று முடிகிறது என்கிறார் அவர்.அதனாலே ஒருவன் ஆத்திகனா–நாத்திகனா என்பது முக்கிய மில்லை. அவன் மனத் தூய்மை உள்ளவனா இல்லையா என்பதே முக்கியம்.

இதுதான் இன்றைய தகவல் என்று சொல்லி முடிக்கின்ற இந்த நேரத்திலே இதோ எதிரிலே ஒரு வானொலி நேயர் வந்து நிற்கின்றார்."என்ன விடயம்!'' என்று விசாரிக்கிறேன் என்றார். "எங்களுக்கு நீங்கள் ஒரு வரம் கொடுக்க வேண்டும்!'' என்றார். "என்ன வேண்டும் என்று கேளுங்கள்!'' என்றேன். "அடிக்கடி புராணக் கதைகளைச் சொல்லி நீங்கள் எங்களின் பொறுமையைச் சோதிக்காமல் இருந்தால் போதும்!'' என்றார்.

# தமிழ் ஆய்வாளர் ஸ்ரீ பிருந்திரனுக்கு ஊடகத்துறையில் கலாநிதிப்பட்டம்

(கொழும்பு)

இலங்கையின் ஊடகப் பரப்பில் நீண்ட தொழில்சார் பரீட்சையமும் கற்பித்தல் மற்றும் ஆய்வில் அனுபவம் உள்ளவர் கலாநிதி ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்திரன். தற்போது இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றுகிறார்.

இந்தியாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வெகுசனத் தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஜீ.பாலசுப்பிரமணியராஜாவின் நெறிப்படுத்தலில் "இலங்கையின் வெகுசன ஊடக சட்டங்கள் ஒழுக்க நியமங்கள் தொடர்பான பகுப்பாய்வில்" கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.

ஊடகவியலில் சமூக விஞ்ஞான ரீதியான கலாநிதி பட்டம் பெறும் முதல் இலங்கைத் தமிழ்



ஆய்வாளர் இவராவர். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் "இலங்கையின் தொலைக்காட்சி ஒளிபரப்பின் தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சி" தொடர்பில் முதுதத்துவமாணிப்பட்டத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் வெகுசன ஊடகவியலில் முதுமாணிப்பட்டமும் பெற்றுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தில ஊடகவியலில் பட்டய டிப்ளோமா பட்டமும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பட்டமும் பெற்றவர்.

கலாநிதி ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்திரன் இலங்கை ஊடகவியற் கல்லூரியின் விரிவுரையாளராக பணிபுரியும் காலத்தில் இருந்து இளம் சமுதாயத்தினருக்கு ஊடகவியலை கற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றார்.

மேலும் சில சர்வதேச உள்நாட்டு கருத்தரங்குகளில் இலங்கையின் ஊடகங்களின் போக்குகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மூலமாக இலங்கைக்கு பெருமை தேடித் தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-2)

# தஞ்சைப் பெருங்கோவிலின் குடமுழுக்கு கிரியைகளில் யாழ்.சிவாச்சாரியார்



(தஞ்சை)

இராஜராஜ சோழனால் கட்டுவிக்கப்பட்ட தஞ்சைப் பெருங்கோவிலின் குடமுழுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

இந்த குடமுழுக்கு கிரியைகளில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய பரம்பரை குரு ஆகமப் பிரவீணா சிவஸ்ரீ கைலாசநாத வாமதேவக்குருக்கள் சர்வசாதகாச்சாரியாராக கலந்து கொண்டார். (இ-18)



வரணி கலாசார மத்திய நிலையமும் கலாசார மத்திய நிலைய அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்திய நடனக் கற்கையைப் பூர்த்தி செய்து தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரணி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி வினோஜிதா கௌசிகன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக்கழக பொருளாளர் செ.செந்தூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-கொடிகாமம் செய்தியாளர்)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஏ.ஜி.யோகராஜாவின் எழுவோம்! நிமிர்வோம்! திரள்வோம்! (சமூக சமத்துவம். அடுத்த கட்ட முன்னகர்வு குறித்த முன்வரைவு) நூல் வெளியீடும் புத்தகத்துடன் பேசுதலும் நாளை மறுதினம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ரெங்கன் தேவராஜன் தலைமையில் நடைபெறும். (இ-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 40 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 166 cm<br>தகைமை/தொழில்: B.Sc பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/10464 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 37 ½ செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Marketing & Management<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant<br>தொ.இ: G/ 10493 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 38 ¼ சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L, முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/ 10466 | பிறப்பு: 1979 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.Sc, Canada<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant (பெண் விவாகரத்தானவர்)<br>தொ.இ: G/ 10495 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 17<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/ 10467 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூசம் செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.Sc, பல் மருத்துவர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/10496 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 58 ½ செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: Diploma, விவசாய போதனாசிரியர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/10468 | பிறப்பு: 1994 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: மீனம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L, தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/10497 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# செயல்முறைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் வருடாந்தம் நடத்தி வரும் செயல்முறைப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு என்னும் இரு பிரிவுகளாக இடம் பெறும்.

இப் போட்டிகளில் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 400 பேர் தோற்றவுள்ளனர். கோலம் போடுதல் போட்டி காலை 9 மணிக்கும் மாலை கட்டுதல் போட்டி முற்பகல் 10.15 மணிக்கும் தோரணம் பின்னுதல் போட்டி முற்பகல் 11.30 மணிக்கும் நடை பெறும்.

மாணவர்களுக்கான அனுமதியட்டைகள் பரீட்சார்த்திகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கும் அறநெறிப்பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் போட்டியாளர்கள் போட்டிகளுக்குரிய பொருட்களுடன் குறித்த நேரங்களுக்கு சமுகம் தர வேண்டும் என சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சை செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

இதே தினம் தரம் 1,2,3 மாணவர்களுக்கான நீதி நூல் மனனப்போட்டியின் இறுதிச் சுற்று பிற்பகல் 3 மணி முதல் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் முதல் சுற்றுக்களில் தெரிவான 108 மாணவர்கள் பங்கு பங்குபற்றவுள்ளனர் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

# இன்று மஹா கும்பாபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம் பெற்றது. (இ-18)

# மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இலக்கு வைத்துள்ள அரசின் பொருளாதார முன்னெடுப்புக்கள் முற்றிலும் தவறு



## முன்னாள் அமைச்சர் சம்பிக்க சுட்டிக்காட்டு

(பத்தரமுல்லை)

பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் நோக்கில் கோட்டாபய அரசாங்கம் பொருளாதார ரீதியில் தற்போது முன்னெடுத்துள்ள தீர்மானங்கள் முற்றிலும் தவறானதாகும்.

இந்நிலைமை தொடர்ந்தால் அரசாங்கம் அடிப்படை செலவுகள் அனைத்தையும் குறைத்துக் கொள்ள நேரிடும் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் நோக்கில் பொருளாதார ரீதியில் அரசாங்கம் எடுத்த தீர்மானங்களால் இன்று நுகர்வோர், வியாபாரிகள் மற்றும் நடுத்தர மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

சுதந்திரம் பெற்றதன் பின்னர் வட்டி மற்றும் சம்பளம் செலுத்திய பின்னர் தேசிய வருமானம் இல்லாமல் போன ஒரே அரசாங்கமாக நடப்பு அரசாங்கத்தைக் குறிப்பிடலாம்.

பொருளாதாரம் மற்றும் தேசிய வருமானம் ஆகியவை தொடர்பான சவால்கள் இரண்டு வகைப்படும்.

நாட்டின் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது (வியத்கம) நிபுணர்களின் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகின்றது.

நல்லாட்சியில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததாக குற்றம் சாட்டும் வியத்கம உறுப்பினர்கள் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தேசிய பொருளாதாரத்தின் நிலைமை எவ்வாறு காணப்பட்டது என்பது தொடர்பில் கருத்துரைப்பதில்லை.

10 வருடகால ஆட்சியில் தேசிய பொருளாதாரம் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டிய நிலை ஏற்பட்டது.

தேசிய பொருளாதாரம் தொடர்பான கொள்கைகளை பாரம்பரிய அடிப்படையிலே இன்றும் நாம் பின்பற்றுகின்றோம். நல்லாட்சி அரசாங்கமும் நடப்பு அரசாங்கமும் பழைய பொருளாதாரக் கொள்கைகளுக்கு அமையவே செயற்பட்டன, செயற்படுகின்றன.

புதிய பொருளாதார கொள்கை முறைமை தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. அதற்கு பல்வேறுபட்ட அரசியல் மற்றும் பொதுக் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்கை ஊடுருவி 30 மில்லியன் ரூபா கொள்ளை

## இரு வெளிநாட்டவர்கள் உட்பட மூவர் கைது

(ஹோமாகம)

ஹோமாகமவிலுள்ள ஒரு தனியார் பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்கிலிருந்து 30 மில்லியன் ரூபாவை சட்டவிரோதமாக தங்கள் கணக்கிற்கு மாற்றியமைக்கவும் அதே பல்கலைக் கழகத்திலிருந்து மேலும் 100 மில்லியன் ரூபாவை தங்கள் கணக்குகளுக்கு மாற்ற முயற்சித்த குற்றச்சாட்டிற்காகவும் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் இரண்டு வெளிநாட்டவர் உள்ளடங்குகின்றனர்.

பிரதான சந்தேக நபர் கம்பளையில் வசிப்பவர் எனவும் அவர் பல்கலைக்கழகத்தின் தரவுகளை ஹெக் செய்து அந்த நிதியை வெளிநாட்டினர் இருவரின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் பெப்ரவரி 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (இ-7)

# மைத்திரியின் வசதி வாய்ப்புக்களை நீடிக்க ஆறு இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் செலவுகளுக்காக கடந்த டிசெம்பர் மாதத்திற்கு மட்டும் 2736 கோடியே 44 இலட்சம் ரூபாய் குறை நிரப்புப் பிரேரணையாக நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இக்குறை நிரப்புப் பிரேரணையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வசதி-வாய்ப்புக்களை நீடிப்பதற்காக 6 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாயும் பாதுகாப்பு அமைச்சின் பலவித தேவைகளுக்காக 128 கோடியே 25 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டது.

அத்துடன் பொலிஸ் திணைக்களம் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு 4 கோடியே 49 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சுக்களான வாகனப் பராமரிப்பு, எரிபொருள் விநியோகம், சம்பளங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பனவற்றுக்கான மேலதிக ஒதுக்கீடாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு 14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இந்தக் குறைநிரப்புப் பிரேரணையில் அதிகமான நிதி அரச துறை ஊழியர்களுக்கு மாதம் 2500 ரூபாய் இடைக்காலக் கொடுப்பனவு வழங்குகின்ற 152 ஆவது வரவு-செலவுத்திட்ட முன்மொழிவை செயற்படுத்துவதற்காகவே ஒதுக்கப்பட்டது. (இ-7)

# இந்துமயானப் பராமரிப்பிற்கு நிரந்தரமாக சுகாதாரத் தொழிலாளியை நியமிக்க வேண்டும்

## நகரசபை உறுப்பினர் நடனதேவன் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கண்ணாடிப் பிட்டி இந்து மயானப் பராமரிப்பிற்கு நிரந்தரமாக சுகாதாரத் தொழிலாளி ஒருவரை நியமிக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் சபையில் வலியுறுத்தினார்.

சாவகச்சேரி நகர சபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்து மயான வளாகத்திற்குள் புற்கள் மற்றும் பற்றைகள் நிறைந்து காணப்படுவதுடன், மயானத்திற்குள் காணப்படுகின்ற இளைப்பாறு மண்டபம் இருக்கைகளில் பறவைகளின் எச்சங்கள் காணப்படுகின்றன.

அத்துடன் மயான வளாகத்தில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் பராமரிப்பு இன்றிக் காணப்படுகின்றன.

எனவே மயானப் பராமரிப்பிற்கென ஓர் சுகாதாரத் தொழிலாளியை நியமிக்க வேண்டும். குறித்த சுகாதாரத் தொழிலாளி மயான வளாகத்தை பராமரிப்பதுடன், மரணச் சடங்குகளுக்கான முற்பதிவுகளை மேற்கொள்ளும் தினங்களில் இளைப்பாறு மண்டபத்தையும் சுத்தப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபையினர் மயானத்தில் சடலங்களை எரிப்பதற்கு கட்டணம் அறவிடுகின்ற போதிலும் மயானத்தை உரிய முறையில் பராமரிப்பதில்லை எனவும் மழைக் காலத்தில் எரிகொட்டகைக்குள் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதால் கிரிகைகளை மேற்கொள்ள பெரிதும் சிரமப்படுவதாகவும் பல்வேறு தரப்பினரும் குற்றம்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# குத்தகைவரி 100 ரூபாய்க்கு மேல் அறவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் பொதுச் சந்தைகளில் வியாபார இடத்துக்கான குத்தகைவரி 100 ரூபாய்க்கு மேல் அறவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்த அமர்வில் உறுப்பினர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் பொதுச்சந்தைகளைக் குத்தகை அடிப்படையில் பெற்ற குத்தகைக்காரர்கள் மாநகரசபைச் சட்ட விதிகளை மீறிக் குத்தகைப்பணம் அறவிட முடியாது.

அவ்வாறு குத்தகைக்காரர்கள் பணம் அறவிடப்படுவது தெரிய வந்தால் அவர்களின் ஒப்பந்தங்களைக் குறித்து மாநகரக் கட்டளைச் சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



கைதடி நுணாவில் அறவழிப் போராட்டக் குழுவின் தையல் பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் தையற் பயிற்சி ஆரம்ப நிகழ்வும் நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த குழுவின் மண்டபத்தில் உப தலைவர் ச.தங்கராசா தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அறவழிப் போராட்டக் குழுவின் முன்னாள் தலைவர் வி.சு.துரைராசா கலந்து கொண்டார். இதேவேளை கைதடி நுணாவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், இயக்குநர் சபை உறுப்பினர்கள், தையல் பயிற்சி ஆசிரியர், பயிற்சியாளர்கள், கைதடி நுணாவில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பொங்கல் நிகழ்வைத் தொடர்ந்து குறித்த பயிற்சி நிலையம் திறக்கப்பட்டது.

(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

## இந்தியாவில் தடை! இலங்கையில் அனுமதி!

# பிணைமுறி மோசடி விசாரணை

# சுயாதீனமாக இடம்பெறவில்லை

## கணக்காய்வு நிறுவனங்கள் மீது கப்ரால் காட்டம்

## குடும்ப உறுப்பினர்கள் நியமனத்தையும் நியாயப்படுத்தல்

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறிகள் மோசடிகள் தொடர்பில் இடம்பெற்ற தடயவியல் கணக்காய்வு உள்ளிட்ட எந்தவொரு விசாரணையும் சுயாதீனமாக இடம்பெறவில்லை என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் பிரதமரின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகருமான அஜித் நிவாட் கப்ரால் குற்றம்சாட்டினார்.**



பிணைமுறிகள் கொடுக்கல்-வாங்கலின் போது திட்டமிட்டபடி குற்றமிழைக்கப்பட்டுள்ளமையால். அது தொடர்பில் பொலிஸார் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் வலியுறுத்தினார்.

இதன்போது. தமது குடும்ப உறுப்பினர்களை உயர் பதவிகளுக்கு நியமித்தமை தொடர்பில் அஜித் நிவாட் கப்ரால் கருத்துத் தெரிவித்தார்.

எனது குடும்பத்தின் உறுப்பினர்கள் இருந்துள்ளதாக தடயவியல் கணக்கு அறிக்கையில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. நான் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தமைக்காக அவர்கள் அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படவில்லை.

நிஹால் பொன்சேகா வங்கித் துறையில் இருந்த ஓர் நிபுணத்துவம் பெற்றவர். டி.எப்.சி.சி.வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளராக அவர் இருந்தார். அமல் கப்ரால் ஹற்றன் நஷனல் வங்கியின் முன்னாள் பணிப்பாளர்களில் ஒருவராவார்.

இவ்வாறு கூறியே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். எனினும். நான் அவர்களுடன் தொடர்புபடவில்லை. அத்துடன். சிவானி தம்பையா. ரேணுகா குழும ஹோட்டலில் முகாமைத்துவப் பணிப்பாளராக இருந்தார்.

சுனில் விஜேசிங்க எனது மனைவியின் சகோதரனாவார். அவர் என்.டி.பி.வங்கியின் தலைவராக இருந்தார். ரணில் விஜேசிங்க இலங்கை வங்கியின் பணிப்பாளர்களில் ஒருவராவார். தாரா விஜேதிலக்க எனது மனைவியின் சகோதரியாவார். அவர் சம்பத் வங்கியில் இருந்தமைக்காகவே குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

எனது மகனான சத்துர கப்ரால் Vallibel Power மற்றும் Fortress ஆகியவற்றின் சபையில் இருந்தார். தம்மிக பெரேராவுடன் ஒருவர் இந்த தடயவியல் கணக்காய்வை மேற்கொள்கின்றார்.

எனது சகோதரி சிரோமி விக்கிரமசிங்க பேர்பெச்சுவல் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தில் இருந்தமைக்காக குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். 2015 மார்ச் 8 ஆம் திகதி இந்த குளறுபடி தொடர்பில் முதன்முதலாக அவர் அறிந்த போது அவர் அங்கிருந்து இராஜினாமா செய்தார்.

அவ்வாறு நேர்மையான முறையில் அவர் செயற்பட்டுள்ளார். ஒரு சதம் கூட பெறவில்லை. எனது மனைவியான சிரோனி கப்ரால் லங்கா வைத்தியசாலையில் பிரதித் தலைவராக இருந்தமைக்காக அதனையும் குறிப்பிட்டுள்ளதாக நான் நினைக்கின்றேன்.

ரவி தம்பையா ரேணுகா ஹோட்டலின் தலைவராக இருந்தார். எனது குடும்பம் தொடர்பில் எனக்கு நம்பிக்கை உள்ளது. அத்துடன் எனது குடும்பத்தினர் தொழில் ரீதியாக அதற்கு தகைமை பெற்றவர்கள் என அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இதேவேளை, கணக்காய்வு அறிக்கை மேற்கொண்ட நிறுவனங்கள் தொடர்பிலும் அஜித் நிவாட் கப்ரால் இந்த ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார்.

கணக்காய்வு செய்த KPMG இந்தியா தொடர்பில் ஆராய்ந்து பாருங்கள். BDO இந்தியா தொடர்பிலும் ஆராய்ந்து பாருங்கள். இவர்கள் தொடர்பில் பாரிய குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இவர்கள் செய்துள்ள மோசடிகள் தொடர்பில் ஆராய்ந்து பாருங்கள்.

இவ்வாறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள பின்புலத்தில், மத்திய வங்கி தொடர்பில் ஆராய்வதற்கான பொறுப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டது. இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு இவர்களுக்கு உள்ளது. அத்துடன், KPMG-யை ஐந்து வருடங்களுக்கு தடை செய்வதாக இந்திய அரசு அறிவித்தது.


இந்திய அரசு அந்த நிறுவனத்தை தடை செய்யும் போது இலங்கை மத்திய வங்கி அவர்களை நியமித்து அந்த அறிக்கையின் படி செயற்படுவதனை நாம் காண்கின்றோம். ஆகவே, இதன் முழுமையான பொறுப்பை பொலிஸாருக்கு வழங்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு என கப்ரால் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# சீனாவின் கொள்கலன்களை

# சோதனை செய்யப்போவதில்லை

## சுங்கத் திணைக்களம் அறிவிப்பு



(கொழும்பு)

சீனாவில் இருந்து இலங்கைக்கு வரும் கொள்கலன்களைச் சோதனை செய்யப்போவதில்லை என சுங்கத் திணைக்களம் நேற்று தெரிவித்தது.

அந்தவகையில் சீனாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படும் கொள்கலன்களில் கொரோனா வைரஸ் தொடர்பில் ஆராயும் தேவை தற்போது கிடையாது என சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் சுங்கத் திணைக்கள அதிகாரியுமான ஜெனரல் சுனில் ஜெயரத்ன தெரிவித்தார்.

அதேவேளை வைரஸானது மனிதனிடம் இருந்து மனிதனுக்கு பரவுமே தவிர இவ்வாறான கொள்கலன்கள் மூலம் பரவுவதற்கு வாய்ப்பில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் கொள்கலன்களின் மூலம் வைரஸ் பரவும் தாக்கம் இல்லையெனவும் அவர் வெளியிட்டுள்ள வர்த்தமானியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

---

# பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்



(அநுராதபுரம்)

வடமேல் மாகாண வேலையற்ற பட்டதாரிகள், தமக்கு தொழில் வங்குமாறு வலியுறுத்தி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அநுராதபுர பிரதேச சபை கட்டடத் தொகுதி முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடந்த 2017 ஆம் ஆண்டு, பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டபோது, ஒரு பகுதியினருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்பட்டது குறித்த தேர்வில் பங்கேற்ற தமக்கு இதுவரை எவ்வித நியமனங்களும் வழங்கப்படவில்லையென, வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறிருக்க, மீண்டும் நேர்முகத் தேர்வொன்றை நடத்தி, ஆசிரியர் சேவையில் வேறு சிலரை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர்கள் குற்றஞ்சாட்டியதுடன், தம்மை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தி, போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஜ)

# தமிழும் சிங்களமும் போதனா மொழிகளாக மாற்றம்; பிளவுகள் ஏற்பட அடிப்படைக் காரணம்

## அமைச்சுக்களுக்கான செயலாளர்களின் தேசிய அமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஆரம்பகாலத்தில் ஆங்கில மொழியே போதனா மொழியாக கற்பிக்கப்பட்டது. அப்போது மக்களுக்கிடையில் எவ்விதப் பாகுபாடும் காணப்படவில்லை. ஆனால் சிங்களம் மற்றும் தமிழ் போதனா மொழியாக கற்பிக்கப்பட்டதையடுத்து பிளவுகள் தோற்றம் பெற்றன என்றும் அதன் பிரதிபலனாகவே நாட்டில் யுத்தமொன்றும் இடம் பெற்றது என்றும் அமைச்சுக்களுக்கான செயலாளர்களின் தேசிய அமைப்பின் தலைவர் கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க சுட்டிக்காட்டினார்.



கொழும்பு - வொன்டர் ஹோட்டலில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாடு சுதந்திரம் அடைந்து 72 வருடங்கள் கடந்துள்ள நிலையில், நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாக இருக்கின்றார்களா? அவர்களிடத்தில் நல்லிணக்கம் பேணப்படுகின்றதா? என்பது தொடர்பில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்கள் மத்தியில் பிளவு வருவதற்கு காரணம் என்ன என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஆரம்பகாலத்தில் ஆங்கில மொழியே போதனா மொழியாக கற்பிக்கப்பட்டது. அப்போது மக்களுக்கிடையில் எவ்வித பாகுபாடும் காணப்படவில்லை. ஆனால் சிங்களம் மற்றும் தமிழ் போதனா மொழியாக கற்பிக்கப்பட்டதை அடுத்தே மக்கள் மத்தியில் பிளவுகள் தோற்றம் பெற்றன. அதன் பிரதிபலனாகவே நாட்டில் யுத்தமொன்றும் இடம்பெற்றது. இந்நிலையில் நாம் எமது கல்வித் திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு மொழியை போதனா மொழியாக கற்பிப்பதே சிறந்தது. அந்த வகையில் ஆங்கிலத்தை நாம் போதனா மொழியாக கற்பித்தால் உலகளாவிய ரீதியில் எம்மால் போட்டியிட முடிவதுடன், பொருளாதாரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதே வேளை நாட்டில் கொஞ்சம் வசதி படைத்தவர்கள் கூட சர்வதேச பாடசாலைகளிலே தமது பிள்ளைகளைச் சேர்க்கின்றனர். சிலர் தேசிய பாடசாலைகளில் சேர்த்து போதனா மொழியாக ஆங்கிலத்தையே கற்கச் செய்கின்றனர். இந்நிலையில் இந்த ஆங்கிலக் கல்வியைப் பெறமுடியாது இருப்பது சாதாரண மக்களின் பிள்ளைகளே.

இதனால் இவர்களால் இணையத்தை கூட முறையாகப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்று இணையத்தின் மூலம் பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இவர்கள் இருக்கின்றனர். இதனால் அனைத்துப் பாடசாலைகளிலும் ஆங்கிலத்தை போதனா மொழியாக மாற்றினால் இவர்களது கல்வி வளர்ச்சியையும் அதிகரிக்கமுடியும். இதுதொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போது தான் நாம் நாட்டில் நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியும். கொழும்பு மற்றும் கொழும்பு நகரத்துக்குள் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதில்லை. இதனால் மக்கள் பெரிதும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்நிலையில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க கால அவகாசம்

(கொழும்பு)

அனுமதிப்பத்திரமில்லாமல் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தும் அல்லது தன்வசம் வைத்திருக்கும் ஆயுதங்களை அரசிடம் ஒப்படைப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டது.

அதன்படி நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையான காலப் பகுதியே இவ்வாறு வழங்கப்பட்டது.

சட்டவிரோத ஆயுதங்களை சமூகத்திலிருந்து களையும் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமைய இந்த ஒருவார கால பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டது.

இப்பொதுமன்னிப்புக் காலப் பகுதிக்குள் அனுமதிப்பத்திரமில்லாத சட்டவிரோத ஆயுதங்களை தம் வசம் வைத்துள்ள நபர்கள் தத்தமது பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் அவற்றினை ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

சட்டவிரோதமாக பயன்படுத்தப்படும் ஆயுதங்களை அரசாங்கம் வழங்கியுள்ள பொது மன்னிப்பு காலப்பகுதிக்குள் ஒப்படைக்காதவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை, அரசு வழங்கியுள்ள நிவாரண காலப்பகுதிக்குள் சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்காமல் தம்வசம் சட்டவிரோதமான முறையில் தொடர்ந்து வைத்திருப்பவர்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தவர் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறியத்தருமாறு பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தது. (ஜ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1969

நிரஞ்சன்




வதனி




யாதவி




கவினயா




சுதர்சன்




றவன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தோட்ட நிறுவனங்கள் சம்பளம் வழங்காவிட்டால் என்ன செய்வதென்று பின்னரே தீர்மானம்-பந்துல

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு, எதிர்வரும் மார்ச் மாதம் பெருந்தோட்ட நிறுவனங்கள் ஆயிரம் ரூபாய் நாளாந்த சம்பளத்தை வழங்காவிட்டால், என்ன செய்ய வேண்டும் என்பதை அதன் பின்னரே தீர்மானிக்க வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை தோட்ட நிறுவனங்கள் புறக்கணித்துள்ள நிலையில், குறித்த நிறுவனங்களுக்கு சொந்தமான தோட்டங்கள் அரசுடைமையாக்கப்படுமா? என்றும் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்குவதற்கான இயலுமை அரசாங்கத்திற்கு இருக்கிறதா? என்றும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, இன்னும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆகவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

சொல்வது என்பதும் செயற்படுத்துவது என்பதும் வெவ்வேறானதாகும். அவர்கள் அதனை நிறைவேற்றுவார்களா என்பதை முதலாம் திகதிவரை பார்ப்போம். இல்லாவிட்டால், அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன என்பதை பார்ப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# அம்பாறையில் போட்டியிட கருணா தீர்மானம்



(அம்பாறை)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் தெரிவித்தார்.

கல்முனை உப பிரதேச செயலக முன்றலில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 10 மணியளவில் கட்சி ஆதரவாளர்களை சந்தித்த பின்னர், நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திறமைமிக்க புத்திஜீவிகள் இளைஞர்களை இணைத்துக்கொண்டு தனித்துவமாக போட்டியிடுவதற்கு தீர்மானித்ததாக தெரிவித்தார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியானது அழிந்துபோகின்ற ஒரு கட்சியாகத்தான் காணப்படுகிறது என்றும் விமர்சித்த அவர், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தரம் உயர்த்தும் என்ற விடயத்தில் நற்செய்தியொன்று கிடைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இதை உடனே தரம் உயர்த்தித் தரவேண்டும் என்று அழுத்தமாகக் கூறியதாகவும் தெரிவித்தார். (ஐ)

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து பரிசீலிக்க சட்டமா அதிபர் அறிவுறுத்து

(கொழும்பு)

இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பரிசீலனை செய்யுமாறு சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்திற்கு நேற்று வியாழக்கிழமை அறிவுறுத்தினார். (இ-7)

# பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய கோட்டா அரசை பலப்படுத்துங்கள்

## வடமேல் மாகாண ஆளுநர் கோரிக்கை



(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தைப் பலப்படுத்துவதன் மூலம் நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசங்களைக் கூடிய விரைவில் அபிவிருத்தி செய்ய முடியும் என வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முஸம்மில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கல்பிட்டிய எத்தாளை வித்தியாலயத்தில் 15 இலட்சம் ரூபாய்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மண்டபத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் சமூகம் விட்ட தவறைத் திருத்திக் கொள்வதற்கான இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் அமையவுள்ளது. எனவே, அந்தத் தேர்தலில் ஜனாதிபதியின் கரத்தை பலப்படுத்த ஒவ்வொரு ஊரிலும் உள்ள முஸ்லிம் மக்கள் தயாராக வேண்டும்.

எதிர்வரும் 5 வருடங்களுக்கு அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவையில் இருக்க வேண்டும் என்றால், கடந்த வருடங்களைப் போன்று ஐக்கிய தேசிய கட்சிக்கோ அல்லது வாக்குகளைச் சிதறடிக்கும் சிறுபான்மைக் கட்சிகளுக்கோ துணைபோகாமல் சிந்தித்துச் செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான பிரியங்கர ஜயரத்ன, அருந்திக்க பெனாண்டோ, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் தாஹிர், கல்பிட்டிய பிரதேச சபை தலைவர் ஏ.எம். இன்ஸாப் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## போயாதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சத்தியசாயி சேவா நிறுவனத்தில் போயாதின நிகழ்வுகள் நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 4.45 மணிமுதல் இடம்பெறும். இதில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் சிறப்புரையாற்றுவார். (இ-5)

# செய்தித்துளிகள்

## நிழற்பிரதி இயந்திரம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை மேம்படுத்தும் முகமாக நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு நிழற்பிரதி இயந்திரம் நேற்று முன்தினம் குறித்த கழகத்தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரால் பாடசாலை சமூகத்தினரிடம் கையளிக்கப்பட்டது. (இ-9)

## இலவச பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தின் முறைசாராக்கல்விப் பிரிவால் தையல், சிங்களமொழி ஆகிய பயிற்சி நெறிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. பாடசாலைக்கல்வியை முடித்தவர்கள், இரண்டாவது தடவையும் க.பொ.த.சாதாரண தர, க.பொ.த.உயர்தரத்தில் சித்தி பெறாதவர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி என்ற முகவரிக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கரணவாய்)

மணக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் சோ.வாகீசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.இராஜசீலன், சிறப்பு விருந்தினராக மணற்காடு புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை ஆபிரகாம் ஸர்கரன்ராஜ் அடிகளார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 240 | 230 | 300 |
| தக்காளி | 300 | 300 | 400 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 150 | 150 | 140 | 130 | 200 |
| கரட் | 300 | 400 | 400 | 350 | 500 |
| பூசணி | 140 | 150 | 130 | 180 | 200 |
| புடோல் | 140 | 180 | 140 | 120 | 200 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 200 | 150 | 110 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 140 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 200 | 240 | 240 | 220 | 280 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 180 | 150 | 140 | 220 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 230 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 800 | 500 | 1000 |
| போஞ்சி | 250 | 200 | 300 | 200 | 250 |
| கத்தரித்தம்புள்ள | 100 | 100 | 90 | 100 | 120 |
| கீரை-1பிடி | 50 | 35 | 30-40 | 30 | 40 |
| தேசிக்காய் | 50 | 30 | 60 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 50 | 60 | 40-80 |
| இராசவள்ளி | 200 | 160 | 200 | 150 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 250 | 200 | 300 |
| முள்ளங்கி | 50 | 120 | 60 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | — | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 100 | — | — | 120 | 120 |




# சுத்தம் சுகம் தரும்



காலாண்டுத் தேர்வு விடுமுறை முடிந்து பள்ளி திறந்தது. ஆறாம் வகுப்பாசிரியர் திருத்திய விடைத்தாள்களுடன் வகுப்பறைக்கு வந்தார். வகுப்பிற்குள் நுழைந்ததும் ஆசிரியர் நேரே குமாரிடம் தான் வந்தார்.

"ஏன்டா அழுக்குச் சட்டையைப் போட்டுக் கொண்டு வந்திருக்கிறாய்" என்று இரகசியமாக அவனிடம் கேட்டார்.

'சொறி சேர்...மறந்திட்டேன் சேர்' என்று சமாதானம் சொன்னான் குமார்.

படிப்பில் முதலாவதாக மதிப்பெண் வாங்கும் குமார் ஏனோ தன்னைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டமாட்டான். காலையில் குளிக்க மாட்டான். பல நாட்கள் பல்லைக்கூட துலக்காமல் பள்ளிக்கு வருவான்.

கேட்டால். "யானை என்ன பல்லா விளக்குகிறது?" என்று கிண்டலாக திருப்பிக் கேட்பான்.

குமாரின் அம்மாவும் வகுப்பு ஆசிரியரும் பலமுறை அறிவுரை கூறியும் அவன் தன்னைச் சுத்தமாக வைத்துக்கொள்வதில் கவனம் செலுத்தவே இல்லை. ஆனால் அவன் கவனம் என்னவோ முழுக்க முழுக்கப் படிப்பிலேயே இருந்தது.

அரையாண்டுத் தேர்வு வந்தது. குமார் விழுந்து விழுந்து படித்தான். எப்போதும் போல் முதல் மதிப்பெண்ணை வேறு யாரும் தட்டிச் சென்று விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

"டேய் குமார், குளிச்சிட்டுப் போய்ப்படிடா" என்று அம்மா சொன்னார்.

"குளிக்கிற நேரத்தில ஒரு பாடம் படிக்கலாம்மா" என்று படிப்பதிலேயே குறியாய் இருந்தான் குமார்.

தேர்வுக்கு இன்னும் இரண்டு நாள் இருக்கும்போது குமாருக்கு திடீரென்று பல் வலி ஏற்பட்டது. வலியோடு பள்ளிக்கூடம் சென்றான்.

மாலை வீட்டிற்குள் வருவதற்குள் அவன் முகத்தில் தாடைப் பகுதி பெரிதாக வீங்கிவிட்டது. 'விண் விண்' என்று வலித்தது. உடம்பு வேறு அனலாகக் கொதித்தது.

குமாரின் அம்மாவும் அப்பாவும் கை வைத்தியமாக ஏதோ செய்தார்கள். எதுவும் சரிப்படவில்லை. விடிந்தால் அரையாண்டுத் தேர்வு. குமார் புலம்பிக் கொண்டே இருந்தான். அவனால் பல்வலியைத் தாங்க முடியவில்லை.

குமாரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். "பல்வலிக்குக் காரணமாக இருந்த சொத்தைப் பல்லை உடனடியாகப் பிடுங்க வேண்டும்" என்றார் டாக்டர். காய்ச்சல் வேறு.

"தினந்தோறும் பற்களைச் சுத்தம் செய்தால் இப்படிப்பட்ட பிரச்சினையெல்லாம் வரவே வராது" என்றார் டாக்டர்.

குமார் சில நாட்கள் வைத்தியசாலையில் இருந்தான். குமாரால் அந்த அரையாண்டுத் தேர்வை எழுத முடியவில்லை.


அரையாண்டுத் தேர்வு விடுமுறை முடிந்து அன்று தான் பள்ளிக்கூடம் திறந்தது. அன்று வகுப்பில் 'ரேங்க்' கார்டு கொடுக்கப்பட்டது. "முதல் மதிப்பெண் கார்த்திக்" என்று வகுப்பாசிரியர் சொன்னதும் குமார் கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. ஆசிரியர் அவனைச் சமாதானப்படுத்தினார்.

"சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும். நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால் தான் எதையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்" என்றார் ஆசிரியர்.

குமார் மௌனமாக இருந்தான். அப்போதே அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

அடுத்த நாள் அவன் பள்ளிக்கு வரும்போது "அழுக்கு மாமா இப்போ 'லக்ஸ்' சோப்புக்கு மாறிட்டான்டா" என்று ஒருவன் சொல்ல மாணவர்கள் அனைவரும் கலகலவென்று சிரித்தனர். குமாரும் அவர்களோடு சேர்ந்து சிரித்தான்.

## காட்டில் ஒரு திருமணம்



கருங்குருவி வீட்டில்
ஒரு கலியாணம் நடந்ததாம்
காட்டில் உள்ள பறவையெல்லாம்
கலந்து வேலை செய்திற்றாம்

ஒரு ஊர்க்குருவி ஓடி ஓடி
ஊருக்கெல்லாம் சொல்லிற்றாம்
இரண்டு குயில் பறந்து வந்து
இனிமையாகப் பாடிற்றாம்


மூன்று மயில் நடந்து வந்து
முனைந்தழகாய் ஆடிற்றாம்
நான்கு அன்னம் நடந்து வந்து
நாட்டியங்கள் செய்திற்றாம்

ஐந்து கிளி கூடிப் பெண்ணை
அலங்கரிக்கச் சென்றதாம்
ஆறு புறா கூடிப்பிள்ளை
அழகு செய்ய போயிற்றாம்

ஏழு மைனா கூடிக்கொண்டு
விருந்தினரை அழைத்ததாம்
எட்டுக் காடை கூடிக்கொண்டு
கொட்டுமேளம் கொட்டிற்றாம்

ஒன்பது காக்கை கூடிக்கொண்டு
உறவினரை அழைத்ததாம்
பத்து கொக்கு பறந்து வந்து
பந்தல் வேலை பார்ததாம்

## வழிகாட்டுங்கள்



## விடுகதைகளும் விடைகளும்

• அடி மேல் அடி வாங்குவான். ஆனால் அனைவரையும் தலையாட்ட வைப்பான். இவன் யார்?

**மிருதங்கம்**

• அடித்து நொறுக்கி அனலில் போட்டால் ஆவியாகத் தோன்றி கமகமக்கும். இது என்ன?

**சாம்பிராணி**

• அச்சு இல்லாத சக்கரம். அழகு கூட்டும் சக்கரம். இது என்ன?

**வளையல்**

• அறிவின் மறுபெயர். இரவில் வருவது. இது என்ன?

**மதி (நிலா)**

## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன். ~ நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் மாணவர்களைக் காப்பாற்ற ஆசிரியர்கள் முன்வர வேண்டும்

இறைவனின் அருளாசி பெற்ற நாயன்மார்கள் பாடியருளிய திருமுறைகளைப் பாடுவதும் பாராயணம் செய்வதும் நம்மைப் பக்குவப்படுத்தவல்லதென்பது நம்முன்னோர்களின் முடிவு.

அதிலும் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் மனக்கவலை நீக்கவல்ல மாமருந்து.

எனவே இறையருளாளர்களால் பாடப்பெற்ற திருமுறைகளை ஓதுகின்ற நடைமுறை நம் மாணவர்களிடையே பழக்கப்படுத்த வேண்டும்.

முன்பெல்லாம் கிழமையில் ஒரு நாளேனும் ஆலயத்துக்குச் செல்வது, ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை செய்வது, எல்லோருமாகச் சேர்ந்து திருமுறைகளைப் பாடுவது என்ற நடைமுறை இருந்தது.

ஆனால் இப்போது அதிகாலை எழுந்தால் இரவு ஒன்பது மணிவரை ரியூசன் என்று ஓடித் திரிவதிலேயே பெற்றோர்களதும் மாணவர்களதும் நேரம் கடந்து விடுகிறது.

ஆம், வெள்ளிக்கிழமை தோறும் ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடாற்றும் பழக்கம் நம்மிடையே வழக்கமாக இருந்தது.

ஆனால் இப்போது நேரம் இல்லை என்ற காரணத்தோடு ஆலய வழிபாடுகள் நின்று போக, மாணவர்களிடையே – இளம் சந்ததியிடையே மனதை ஆற்றுப்படுத்தும் வழி தெரியாமல் போயிற்று.

நம் முன்னோர்கள் ஆலய வழிபாட்டை வலியுறுத்தியதற்குள் நிறைந்த உளவியல் காரணங்கள் உண்டு.

ஆலயத்துக்கு சென்று வருவது மன ஆறுதலைத் தருவதுடன் புதிய சிந்தனைக்கும் வித்திடுகிறது.

எனினும் சமகாலச் சூழ்நிலைகள் ஆன்ம சுகத்துக்கு இம்மியும் இடம் வழங்காத நிலையில், எதையும் எதிர்கொள்ள முடியாத மன நிலைக்கு மாணவர்களும் இளம் பிள்ளைகளும் ஆளாகின்றனர்.

இதன்காரணமாக ஒவ்வொரு நாளும் தற்கொலை மரணங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

அதிலும் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதான கொடுமை எம்மிடம் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் சவாலாகும்.

தவிர, மாணவர்கள் தற்கொலை செய்வதான சம்பவங்கள் முன்னுதாரணமாகிவிடுமோ என்று ஏக்கத்தைத் தந்துள்ளது.

எனினும் இதுபற்றி யாரேனும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. எல்லாம் வெறும் சம்பவங்களாக கதைபட்டு காலத்தோடு கடந்து போகிறது.

பாடசாலைகளில் ஆற்றுப்படுத்தலும் வழிகாட்டலும் என்றைக்கு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டதோ அன்றைக்கு அந்தப் பணியில் இருந்து ஏனைய ஆசிரியர்கள் விடுதலை பெற்றுக் கொண்டனர்.

ஆலோசனை, வழிகாட்டல், ஆற்றுப்படுத்தல் என்பனவற்றை ஒட்டுமொத்த ஆசிரியர்களும் செய்ய வேண்டும்.

அதனையே எங்கள் ஆசிரியர் சமூகம் செய்து வந்தது.

என்றைக்கு கல்வியாளர்கள் உளவியலுக்கும் வழிகாட்டலுக்கும் அறிக்கை தேவையென்றார்களோ அன்றைக்கு ஆசிரியத் தொழிலின் அடிப்படையே ஆட்டம் கண்டு போனது.

ஆக, எங்கள் மாணவர்கள் எடுக்கின்ற மிகத் துன்பமான முடிவுகளை தடுப்பதற்கு அனைத்து ஆசிரியர்களும் முன்வர வேண்டும்.

இந்தத் தார்மீகப் பணியை செய்வது மிகப் பெரும் புண்ணியமாகும்.

## அன்பேசிவம் விருது வழங்கலும் சஞ்சிகை வெளியீடும்

அகில இலங்கை சைவ மகா சபையின் அன்பே சிவம் விருது வழங்கலும் சஞ்சிகை வெளியீடும் தைப்பூச தினமான நாளை சனிக்கிழமை (2020. 02. 08) பிற்பகல் 2.30 மணி க்கு சபையின் தலைவர் சிவத்திரு நா.சண்முகரத்தினம் தலைமையில் இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகப்பேற்று மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி நமசிவாயம் சரவணபவ "அன்பே சிவம்" விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சி.சிறி சற்குணராசா, ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் சி.குணசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## வீதிகளை நவீனப்படுத்தும் வேலைகள் விரைவில் ஆரம்பம்

### அங்கஜன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஒரு இலட்சம் கி.மீ கிராமிய வீதிகளை நவீன வீதிகளாக்கும் திட்டத்தின் கீழ்,கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள கிரா்மிய வீதிகளை புனரமைக்கும் பூர்வாங்க வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" தேசியக் கொள்கையின் பிரகாரம் குறித்த திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க வேலைகளை தமது மேற்பார்வையின் கீழ் செயற்படுத்துமாறு கோரிய அனுமதிக்கடிதம் தமக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-10)

## சட்டவிரோத மண்அகழ்வில் ஈடுபட்டவர்கள் முள்ளியவளையில் பொலிஸாரால் கைது

(முள்ளியவளை)

முள்ளியவளை கயட்டையடி பகுதியில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட தனியார் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் முள்ளியவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் .

முள்ளியவளை புளியங்குளம் வீதியில் கரைதுறைப்பற்று பிரதேசசபையால் குப்பை கொட்டப்படும் பகுதியிலான கயட்டை காட்டு பகுதியிலிருந்து கரைதுறைப்பற்று பிரேதேச சபையின் அனுமதியுடன் முல்லைத்தீவில் அமைக்கப்பட்டுவரும் தனியார் ஹோட்டல் ஒன்றினால் கரைதுறைப்பற்று பிரதேச சபையுடன் இணைந்து நந்திக்கடல் வெளியில் மரநடுகை திட்டத்துக்கும் குப்பைகளை தன்னார்வ சேவையாக புதைத்து தருகின்றோம் எனும் பேரில் நூற்றுக் கணக்கான டிப்பர் செம்மண் கனிய வளங்கள் திணைக்களத்தின் அனுமதிகள் எவையுமின்றி அகழப்பட்டு குறித்த தனியார் நிறுவனத்தின் தேவைக்காக கொண்டுசெல்லப்பட்ட நிலையில் முள்ளியவளை பொலிஸாரால் குறித்த மண்ணகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது .

இதன்போது மண்ணகழ்வுக்காக பயன்படுத்திய கனரக வாகனம் மற்றும் டிப்பர் ஒன்று மற்றும் இரண்டுபேர் முள்ளியவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் .

மண்ணை அகழ்ந்து எடுப்பதற்கான அனுமதி முறையாக கனிய வளங்கள் திணைக்களத்திடம் பெறப்படாது வன திணைக்களம் மற்றும் பிரதேச சபையின் அனுமதியுடன் மட்டும் மண் அகழ்ந்து தனியார் நிறுவனத்தால் கொண்டு செல்லப்பட்டது குறித்து ஊடகவியலாளர்களால் மாகாண கனிய வளங்கள் திணைக்களத்திடம் தொலைபேசிமூலம் வினவப்பட்ட நிலையில் கனிய வளங்கள் திணைக்கள பதிவாளர் அவ்வாறு எந்தவிதமான மண் அகழ்வுக்கான அனுமதிகளும் தம்மால் முல்லைத்தீவில் வழங்கப்படவில்லை எனவும் அவ்வாறு தமது அனுமதிகள் எதுவுமின்றி அகழ்ந்து செல்லப்படும் மண் சட்டவிரோதமானது எனவும் இதற்கான சட்ட நடவடிக்கையை பிரதேச பொலிஸார் மேற்கொள்ள வேண்டியது அவர்களது கடமை எனவும் தெரிவிக்கப்பட்டது .

இதனைத்தொடர்ந்து இந்த சட்டவிரோத மண்ணகழ்வு குறித்து முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஊடகவியலாளர்கள் வினவிய நிலையில் உடனடியாக குறித்த சட்டவிரோத மண்ணகழ்வை தாம் தடுத்து நிறுத்தி கைதுசெய்வதாக தெரிவித்து சம்பவ இடத்துக்கு உடனடியாக பொலிஸ் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டு மண்ணகழ்வில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர் .(ம-9)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வாழ்நாள் மிகக் குறுகியது, வாழ்வு அழிவில்லாதது (அமரத்துவமானது)

**அழித்துக்கொள்! உன்னுடைய வாழ்நாள் மிகக் குறுகியது என்பதைப் பார்!**

காலம் ஓடிக்கொண்டேயிருக்கிறது. உன் வாழ்நாளுடன் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? அது உனக்கும் உன்னைச் சுற்றியிருக்கும் உலகுக்கும் உபயோகமாக இருக்கிறதா? வாழ்நாள் மிகக் குறுகியது என்றுணர்.

விழித்தெழு! வாழ்வு அழிவில்லாதது!

செயலின் பலனை அனுபவிக்க நீ விரும்பும் போது வாழ்வு அழிவில்லாதது என்று அறிந்து கொள். நீ எதிர்பார்க்க நேரும் போது பல பிறவிகள் இன்னும் இருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். பலனை எதிர்நோக்கும் போது காலம் அழிவில்லாதது என அறிந்து கொள். யாராவது உனக்கு நன்றி கூறவில்லையென்றால் அவர்களுக்கு நன்றி சொல். ஏனெனில் அவர்கள் உனக்குப் பிறகு தாமதமாக வட்டியோடு திருப்பிக் கொடுப்பார்கள். அதனால் யாரும் தான் பாராட்டப்படவில்லை என்றோ, மற்றவர்கள் தன்னைப் பயன்படுத்திக் கொண்டதாகவோ வருத்தப்பட வேண்டாம். எதிர்காலத்தில் நீ வட்டியோடு திரும்பப் பெறுவாய் என்று அறிந்து கொள்.

உன்னுடைய நற்செயல்களுக்கு அருளாசிகளுக்குப் பலனை அனுபவித்து மகிழும் காலத்தில் வாழ்வு அழிவில்லாதது என்பதை அறிந்து கொள். எப்போதானாலும் மிக அவசரத்தில் நீ இருக்கும் போது உன்னால் அனுபவித்து மகிழ முடியாது. ஆகவே வாழ்வு அழி வில்லாதது என அறிந்து கொள். (முற்றும்)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**என்னிடம் எதை வேண்டுமானாலும் கேள்; ஆனால் நேரத்தை மட்டும் கேட்காதே!.**

**-நெப்போலியன**

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

**தீயாரைக் காண்பதுவும் தீது என்ற ஔவையாரின் வாக்கின்படி தீயாரை விட்டு விலகியிருப்பது தான் சிறந்த நன்னெறியாகும். தீயவர்கள் அது பற்றி நம்மைக் குறைவாகப் பேசுவதையும் நினைப்பதையும் நாம் பொருட்படுத்தல் கூடாது. தெய்வம் நமக்குத் துணை செய்யும்.**

### அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## 16 வகை லட்சுமிகள்

**ஸ்ரீசாந்தலட்சுமி:-** பொறுமை கடலினும் பெரிது. பொறுத்தார் பூமியை ஆள்வார். பொறுமையுடனிருந்தால் ஸ்ரீசாந்தலட்சுமியின் அருள் கிடைக்கும்.

**ஸ்ரீகிருத்திலட்சுமி:-** நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும், மனதை ஒரு நிலைப்படுத்தி நேர்த்தியுடன் செய்தால், புகழ் தானாக வரும். மேலும் ஸ்ரீகீர்த்தி லட்சுமியின் அருள் நிச்சயம் கிடைக்கும்.

**ஸ்ரீவிஜயலட்சுமி:-** விடாத முயற்சியும் உழைப்பும், நம்பிக்கையும் இருந்தால் நமக்கு எல்லா காரியங்களிலும் வெற்றி தான். ஸ்ரீவிஜயலட்சுமி எப்பொழுதும் நம்முடன் இருப்பாள்.

**ஸ்ரீஆரோக்கிய லட்சுமி:-** நாம் நம் உடல் ஆரோக்கியத்தை கவனித்தால் மட்டும் போதாது, உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும், கோபம், பொறுமை, காமம், பேராசை போன்ற நோய்க் கிருமிகள் நம் மனதில் புகுந்து விடாமல் இருக்க ஸ்ரீ ஆரோக்கிய லட்சுமியை வணங்க வேண்டும். (முற்றும்)

# அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டம் சென்றலைட்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு



அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியின் 6 ஆவது தகுதி காண் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை 04.02.2020 அன்று யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற போது சென்றலைட்ஸ் அணி, ஜொலிஸ்ரார் அணியை 53 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 50 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றது.


கௌதமன்-34, பிரியலக்ஸன்-25, நிஷாந்-32, டார்வின்-73, நிரோஜன்-65, ஜேம்ஸ்-13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் சார்பாக கோபிராம்-03, வாமணன்,ஜனார்த்தனன் தலா-02, சோபன், ருக்ஸ்மன் தலா-01 இலக்கினையும் கைப்பற்றினர். 308 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 46.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது.

சந்தோஸ்-11, அருண்குமார்-19, ஜனார்த்தனன்-66, ருக்ஸ்மன்-17, கிரிஷாந்-21, சோபன்-29, கோபிராம்-33, வாமணன்-18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் சார்பாக டார்வின், பிரியலக்ஸன் தலா-03 இலக்குகளையும் நிரோஸன்-02 இலக்குகளையும் ஜேம்ஸ், ஜெரிக் தலா-01 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போடியின் மூலம் யாழ். சென்றல் விளையயாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு சென்றலைட்ஸ் அணி - 9.60 புள்ளிகளையும் ஜொலிஸ்ரார் அணி 3.54 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)


# நொதேண் விளையாட்டுக்கழகத்தின் பொங்கல் விழா







தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்திய மரபியல் ரீதியிலான பொங்கல் நிகழ்வும் விளையாட்டு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

கிரிக்கெட், கரப்பந்தாட்டம், கயிறுழுத்தல், கபடி, உதைபந்தாட்டம், மரதன், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, சிறுவர்களுக்கான விளையாட்டு என்பன நடைபெற்றன. 20 பானைகளில் பொங்கல் பொங்கி நிகழ்வு சிறப்பாக நடைபெற்றதோடு இசைக்கச்சேரியும் இடம்பெற்றது. (க)







# உதைபந்தாட்ட வீரர்களுக்கு உபகரணங்கள் கையளிப்பு



மன்னார் மாவட்டத்தில் உள்ள திறமை வாய்ந்த உதைபந்தாட்ட வீரர்களுக்கான கால்பந்தாட்ட உபகரணங்கள் கடந்த புதன்கிழமை மாலை 7 மணியளவில் சட்டத்தரணி டினேஸன் தலைமையில் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இம் மாதம் பிரமாண்டமாக இடம்பெறவுள்ள மன்னார் உதைபந்தாட்ட சுற்று போட்டியை முன்னிட்டு மாவட்டத்திலுள்ள திறமையான வீரர்களை உள்ளடக்கிய மன்னார் பீனிக்ஸ் அணியில் தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கு தேவையான பாதணிகள் மற்றும் அவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார், நானாட்டான், மாந்தை, மடு, முசலி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் திறமையான வீரர்களுக்கு விளையாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் முகமாக சுமார் 30 வீரர்களுக்காக குறித்த விளையாட்டு உபகரணங்கள் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டுள்ளன.

அதேநேரத்தில் தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான இலவச பயிற்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## யாழ்.பல்கலைக் கழகத்தில் அளவுக்...

எடுக்குமாறு அமைச்சு மட்டத்திலும், வடக்கு மாகாண ஆளுநர் மட்டத்திலும் இருந்து பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

அண்மையில், கிளிநொச்சியில் பகிடிவதை காரணமாக பல்கலைக் கழக மாணவி ஒருவர் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக பதிவாளரிடம் கேட்ட போதே இந்த விடயம் அறியக்கிடைத்தது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அளவுக்கதிகமாக பகிடிவதை இடம்பெறுகின்றமை குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கும், உயர் கல்வி அமைச்சுக்கும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர், மாணவர்களின் பெற்றோர் பலர் செய்த முறைப்பாடுகளை யடுத்து, இது குறித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், பல்கலைக் கழக நிர்வாகம் பகிடிவதைக்கு எதிராகக் கடும் நிலைப்பாட்டில் இருக்கின்றது என்ற நம்பிக்கையைப் பெற்றோர் மத்தியில் ஊட்டும் வகையிலும் யாழ். பல்கலைக்கழகத் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமியின் அறிவுறுத்தல்களுக்கமைய விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த திட்டம் பற்றி பல்கலைக் கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், முறைப்பாட்டு அதிகாரி, பிரதி முறைப்பாட்டு அதிகாரிகள், மாணவ ஆலோசகர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள், நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் உட்பட மாணவர் ஒழுக்கத்துடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி இன்று 7 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வளாகத்தில் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் பதிவாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேநேரத்தில், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் பகிடிவதை குறித்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தனிப்பட்ட முறையில் விசாரணைகளை முன்னெடுத்திருக்கிறார்.

இது குறித்த நிலைமைகளை ஆராய்வதற்கென உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் அடுத்த வாரம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு வரவுள்ள அதிகாரிகள் குழுவினருடன், வடக்கு மாகாண ஆளுநரும் இணைந்து கொள்ளவுள்ளார். (ம)

## மாங்குளத்தில்...

மாங்குளம் பாலைப்பாணி பகுதியில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி உதய நகரைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பாலகுமார் ஜெகதீஸ்வரன் (வயது - 43) என்பவரே கொல்லப்பட்டுள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட மாங்குளம் பொலிஸார் சந்தேகத்தில் இருவரை கைது செய்துள்ளனர். (ம-9.15.315)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 875
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,144,515/-
வெற்றி இலக்கங்கள்
09 13 17 22 H

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1122
சீட்டிழுப்பு திகதி 06.02.2020 வியாழக்கிழமை
N 22 36 62 72
8 5 1 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.94,763,436

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1645
சீட்டிழுப்பு திகதி 06/02/2020
வெற்றி இலக்கங்கள்
07 21 31 39 R
ரூ. 46,116,984

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06.02.2020
வெற்றி வாரம் 2761
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்
தனுசு 14 41 46 51
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,858,146
2020/02/07 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## கல்முனை வடக்கு உப பிரதேச...

செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் 1993ஆம் ஆண்டு ஒரு இனக்குழுவினரால் பிரிக்கப்பட்டது. அப்போதுவிட்ட தவறு இப்போது இன ரீதியாகத் தனிமைப்படுத்த காரணமாக அமைந்துள்ளது.

எனவே அதனை தரமுயர்த்துவது அவசியமாகும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ச, முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு திட்டவட்ட மாகத் தெரிவித்தார்.

கல்முனை உப பிரதேச் செயலகத்தை தரம் உயர்த்துவது தொடர்பில் ஆராயும் கூட்டம் பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, பாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கஜன் இராமநாதன், சதாசிவம் வியாழேந்திரன், எச்.எம்.எம். ஹறிஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம் அதாவுல்லா, கிழக்கு மாகாண ஆளுநர், அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அதாவுல்லா, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை இன ரீதியாக பிரிக்கப்படவேண்டுமா? அதனைத் தவிர்த்து இனங்களுக்கு இடையே ஒற்றுமையை ஏற்படுத்துவோம் என தமிழ் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு எதிராக தனது கருத்தை முன்வைத்தார். (ம-10)

## இளைஞர் ஒரு...

சேகரம் சத்தியேஸ்வரன் வயது 32 என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரின் மரண விசாரணையை யாழ் · போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## திருகோணமலை...

சேவையிலிருந்து ஓய்வுபெற்று சென்றதையடுத்து மேலதிக அரச அதிபரான அருந்தவராஜா பதில் அரச அதிபராக கடமையாற்றி வருகிறார்.

இந்நிலையில் புதிய அரச அதிபராக மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க விரைவில் கடமைகளை பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்படுகிறது. (ம)

## வடக்கில் சோத...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாகக் கூறி வடக்கில் முப்படையினர் மூலம் பல்வேறு சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இவ்வாறு திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பேருந்து முதல் அனைத்து வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

நாட்டில் போதைப்பொருள் கடத்தப்படும் இடங்கள் எங்கேயோ உள்ளன. போதைப்பொருள் பண்டாரகமவில் அகப்படும் போது வவுனியாவில் சோதனை செய்கின்றனர். தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடாகவே இதனைப் பார்ப்பார்கள் என்றார். (ம)

## இந்தியாவுக்கு...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் பிரதமர் இன்று வெள்ளிக்கிழமை குறித்த விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் மோடி, இந்திய ஜனாதிபதி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்ட இந்தியாவின் உயர் அதிகாரிகளுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

குறித்த விஜயத்தின்போது சாரநாத், புத்தகயா மற்றும் திருப்பதி உள்ளிட்ட பல்வேறு மத வழிப்பாட்டுத் தலங்களுக்கும் பிரதமர் செல்லவுள்ளதாக பிரதமர் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம)

## தற்காலிகமாக அமைக்க மன்னார்...

றையதினம் மன்னார் மேல் நீதிமன்ற நீதவான் சஹறாப்தீன் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

குறித்த விசாரணையின் போது மாந்தை கோவில் நிர்வாகத்தினரும் திருக்கேதீஸ்வர நிர்வாகத்தினரும் இணக்கப்பாடு ஒன்றிற்கு வந்ததற்கு அமைவாக வருகின்ற சிவராத்திரியை முன்னிட்டு 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி மாலை வரை குறித்த பகுதியில் தற்காலிக அலங்காரவளைவு அமைப்பதற்கான அனுமதியை மன்னார் மேல் நீதிமன்றம் நேற்றையதினம் வழங்கியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், திருக்கேதீஸ்வரம் பகுதியில் அலங்கார வளைவு அமைத்த போது கடந்த வருடம் உள்ளக ரீதியில் இரண்டு மதங்களுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினை தொடர்பான வழக்கு மன்னார் மேல் நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது

கடந்த தவணையின் போது சட்டத்தரணி சுமந்திரனால் சிவராத்திரியை முன்னிட்டு தற்காலிக வளைவு அமைப்பதற்கான அனுமதி வழங்குமாறு கோரப்பட்டிருந்ததன் அடிப்படையில் குறித்த விடயம் தொடர்பாக விசேட அவதானம் செலுத்திய மேல் நீதிமன்றம் நல்லிணக்க அடிப்படையில் இரு நிர்வாகத்தினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தற்காலிகமாக குறித்த வளைவை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

அதே நேரம் குறித்த அலங்கார வளைவு தொடர்பான பூர்வாங்க ஆட்சேபனை தொடர்பாக கட்டளை வழங்குவதற்காக குறித்த வழக்கானது இம்மாதம் 11 ஆம் தேதி வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபை சார்பாக குறித்த வழக்கில் முன்னிலையாகிய சட்டத்தரணி திரு.டினேஸன் தெரிவித்துள்ளார். (ம-285)

## நாட்டை கட்டியெழுப்ப அனை...

நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் பெருந்தோட்ட மற்றும் நிதி நிறுவன தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனம் தேர்தல் வெற்றியை எதிர்பார்த்து தயாரிக்கப்பட்ட ஒன்றல்ல, அது பல்வேறு நிபுணர்கள் மற்றும் துறை சார்ந்தவர்களுடன் பல வருடங்களாக ஆய்வு செய்து மக்கள் பணிக்காக தயாரிக்கப்பட்ட ஒன்றாகும்.

பல நிறுவனங் கள் நீண்டகாலமாக வெறுமனே தொழில் வழங்கும் இடங்களாக மாறியுள்ளன. இவ்வாறு நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது. நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவது புதிய தலைவர்களினதும் பணிப்பாளர் சபையினதும் பொறுப்பாகும்.

நடைமுறையில் உள்ள முறைமைகளுக்கு பதிலாக புதிய வழியொன்றின் ஊடாக வீழ்ச்சி யடைந்துள்ள நிறுவனங்களை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம)

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி...

யிலான அணியினர் கைச்சாத்திடவுள்ளனர். நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், சிறிகாந்தா தரப்பு, அனந்தி தரப்பு ஆகியன முதலில் கூட்டமைப்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது என்றும் பின்னர் பொது அமைப்புகளை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டணி தொடர்பான புதிய யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணியை பதிவு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு தமிழர் ஐக்கிய முன்னணியென்ற பெயரை பரிந்துரைந்துள்ளபோதும், அந்த தேர்தல்கள் திணைக்களம் நிராகரித்திருந்தது. இந்த நிலையில், புதிய பெயரை பரிந்துரைக்கும்படி தேர்தல்கள் திணைக்களம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற பெயரை பரிந்துரைத்துள்ளது. அதற்காக கொள்கையளவில் தேர்தல்கள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது. (ம)

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1581 திகதி 2020/02/06
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 11 26 35 55

மஹஜன சம்பத
திகதி 2020/02/06
சீட்டிழுப்பு இலக்கம் 4108
V 0 3 6 1 8 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 06/02/2020
சீட்டிழுப்பு இலக்கம் 2384
H 14 25 29 49

நீரோகா
திகதி 2020/02/06
சீட்டிழுப்பு இலக்கம் 659
லக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 02 25 29 56

## வேலையாட்கள் உடனடியாக தேவை

யாழில் உள்ள நிறுவனமொன்றுக்கு புகைப்படக் கலைஞர் (Camera man) தேவை. பழகவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- (2068)

**0771166090, 0775627713**

## சிறுவர்களுக்கான சதுரங்க பயிற்சி வகுப்புக்கள் தைப்பூச தினத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

தொடர்புகளுக்கு:
organiser
0776670108, 0761086777
facebook ID:
AAA Grand master (2066)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு


UK-550*/=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8785)


ஏழாலை தெற்கு களபாவோடை
வசந்த நாகபூசணி அம்பாள்
தேவஸ்தானம்

## மகோற்சவம் 2020

### இரதோற்சவம்

08.02.2020 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெறும்.

நிகழ்வுகள் யாவும் **ஓம்** T.V வாயிலாக நேரலையாக காண்பிக்கப்படும். (2063)

## பிரதேச செய்தியாளர்களை நியமித்தல்

**வலம்புரி** பத்திரிகையின் **பிரதேச செய்தியாளர்களாக** பணி யாற்றுவதற்கு பொருத்தமும் விருப்பமும் உடையவர்களிடம் இருந்து **விண்ணப்பங்கள்** கோரப்படுகின்றன.

செய்தியாளர்களாக செயற்பட விரும்புகின்றவர்கள்
**தமது முழுப்பெயர்,**
**நிரந்தர முகவரி,**
**பால்,**
**பிறந்த திகதி,**
**தே.அ.அ.இலக்கம்,**
**தொலைபேசி இலக்கம்**
**கல்வித் தகைமை, தொழில்**

போன்ற விபரங்களை உள்ளடக்கியதான விண்ணப்பத்தை எதிர்வரும் **20.02.2020**ஆம் திகதிக்கு முன்னதாக


**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி நாளிதழ்**
**இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**

எனும் முகவரி இட்டு **சாதாரண தபால் மூலமாகவோ** அன்றி **நேரிலோ** ஒப்படைக்கவும்.

**குறிப்பு:** செய்தியாளராகச் செயற்படுவதற்கு ஆர்வமுடையவர்கள் விரும்பினால் குறுங்காலப் பயிற்சி வழங்கப்படும்.

**பொதுமுகாமையாளர்**
**வலம்புரி**

## கண்ணீர்அஞ்சலி



எமது சக நண்பன் **சந்திரகுமார்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

### பாலப்பு கிருஷ்ணசாமி

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் (C-9172)

**தேசிய கல்வியியற் கல்லூரியின் 2ஆம் அணி ஆசிரிய நண்பர்கள்**


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (9946)

## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

**076 443 1576**

## அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9122)


## தவறவிடப்பட்டுள்ளது

மூத்தவிநாயகர் கோவிலுக்கும் - நெல்லியடி சந்திக்கும் இடையில் எனது தே.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி ATM Card மற்றும் 15000/- ரூபாய் பணம் என்பன தவறவிடப் பட்டுள்ளது. அதனைக் கண்டு எடுத்தவர்கள் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்கின்றேன். **தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு:- **077 247 9679** (C-9170)


## வேலையாட்கள் தேவை

கொடிகாமம் A9 வீதியில் உள்ள பிரபல உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. (சமையல், சுத்தம் செய்தல், மேற்பார்வையாளர்)

தொடர்புகளுக்கு: (C-9168)

**0763591400**


# மரண அறிவித்தல்

## திருமதி யோகவதி தர்மலிங்கம்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27.10,1930 | 06.02.2020 |



துணைவி சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகவதி தர்மலிங்கம் அவர்கள் நேற்று (06.02.2020) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தர்மலிங்கத்தின் (முன்னாள் மெந்தலாவ தேயிலைத் தோட்ட உரிமையாளர்) அன்பு மனைவியும் மனோகரன் (அகில இலங்கை இந்து மாமன்ற துணைத் தலைவர், ஓய்வுபெற்ற கைத்தொழில் நீதிமன்ற பதிவாளர்), புஸ்பராணி (ஓய்வுபெற்ற தொழிற் திணைக்கள உத்தியோகத்தர்), இந்துராணி (சுதுமலை), கருணாகரன் (ஓய்வுபெற்ற கணக்காளர், சிமின்டமோ கோப்ரேசன், கொழும்பு), ஜெயகரன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தெய்வஜோதி, காலஞ்சென்ற இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கணக்காய்வாளர் திணைக்களம்), வைத்தியர் ஸ்ரீகரன் (ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்தியர், சுதுமலை), சிவகௌரி, கலைவாணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஸ்ரீஜெனனி, ஜெயகோபன், அமுதினி, பொன் திவாகரன், ஆர்வலன், மேகலா, ஜெயக்குமார், வாசுகி, பாலசாந்தன், சுபாசினி, அருள்வேல், சுகந்தினி, மதிவண்ணன், வைத்தியர் கிறிஷாந்தன், தனுஷிகா, சோபனா, கஜேந்திரன், சிவரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பவித்திரன், கோபிஷன், சாம்பவன், தசாங்கன், ஜனுஷன், விஷாதன், ஹரிஷன், மாதினி, அஜய், விஜய், அஷ்வின், சாயினி, ஆதினி, ரோகித் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2020) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் புலவர்தரை அளவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புலவர்தரை,**
**அளவெட்டி தெற்கு.** (2069)

தகவல்: குடும்பத்தினர்
(0774080335)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.